GOKULAM
செப்டெம்பர் 2008 ✧ விலை ரூ.8/- ✧ 80 பக்கங்கள்

கோகுலம்

குழந்தைகளின் குதூகலம்!




ஸ்பெஷல்
உங்கள் கைவண்ணம்!
எஸ். பவித்ரா,
ஏழாம் வகுப்பு,
காமராஜ் மெட்ரிக் பள்ளி,
நம்பியூர்.

கோகுலம்

கல்கி

தரம் நிரந்தரம்

செப்டெம்பர் 2008 மலர் : 26 இதழ் : 8

உயிர்களிடத்தில் அன்பு வேணும் – தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும் – பாரதியார்

கடந்த மாதம் இதே பகுதியில், ஒலிம்பிக்கில் இந்தியாவின் நிலையைக் குறித்து வருத்தத்துடன் பேசினேன். வருங்காலத்தில் இந்த நிலை மாற வேண்டும் என்று குறிப்பிட்டேன். நிச்சயம் மாறும் என்பதற்கு அடையாளமாக தங்கம் வென்று இந்தியாவுக்குப் பெருமை சேர்த்திருக்கிறார் அபினவ் பிந்த்ரா. அவருக்கு கோகுலம் சார்பாக பாராட்டுகள்!

சென்ற மாதம் கோகுலம் இதழைக் குறித்து உங்களிடமிருந்து வந்த கடிதங்களில் பெரும்பாலானவை அகர வரிசைக் கதைகளைப் பாராட்டியே வந்திருந்தன. இதுபோல் அடிக்கடி வெளியிடுங்கள் என்று குறிப்பிட்டுள்ளீர்கள். உங்கள் விருப்பம் நிச்சயம் நிறைவேற்றப்படும். இதழுக்கு இதழ் ஏதாவது ஒரு புதுமையோடு உங்களைச் சந்திப்போம்.

இனி வரும் மாதங்களில் வரிசையாகப் பண்டிகைகள் வரப்போகின்றன.

இரட்டிப்ப மகிழ்ச்சி!



புத்தாடை உடுத்தி, பலகாரம் உண்டு மகிழ்ச்சியுடன் கழிப்பீர்கள். அதோடு, உங்களால் முடிந்த சின்னச் சின்ன உதவிகளை அந்த நாளில் மற்றவர்களுக்குச் செய்யுங்கள். பண்டிகை மகிழ்ச்சி இரட்டிப்பாக உயரும். செய்வீர்கள்தானே?

அன்புடன்
கோகூ

கோகுலம்

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர்:
லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் : சீதா ரவி
உதவி ஆசிரியர் : ஆரணி யுவராஜ்
வடிவமைப்பு :
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன்,
ச.கார்த்திகேயன்
தொலைபேசி :
044 - 4343 8888 (30 lines)
தொலைநகல் :
044 - 4343 8899
மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
gokulam@kalkiweekly.com
விளம்பரப் பிரிவு :
marketing@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
சந்தா விவரம் :
உள்நாடு : ஒரு வருடம் : ரூ. 96/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : ரூ. 1000/-

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai-600 032.

குழந்தைகளின் குதூகலம்!


சின்னஞ் சிறுகதை

ரேவதி நன்றாகப் படிக்கும் பெண். ஆனால் ஒரு கெட்ட பழக்கம் உண்டு. அவள் தனது அறையை விட்டு வெளியே



செல்லும்பொழுது மின் விசிறியையும், விளக்கையும் அணைக்கவே மாட்டாள். அவளுடைய அம்மா பலமுறை சொல்லிப் பார்த்துவிட்டார். ஆனால் ரேவதி சிறிதும் மாறவில்லை.

ஒரு நாள் பள்ளியிலிருந்து மிகவும் களைப்புடன் வீட்டுக்கு வந்தாள். அவளது அறைக்குச் சென்று விசிறியின் ஸ்விட்சை ஆன் செய்தாள். ஆனால்,



பேசறேன்!

விசிறி சுற்றவே இல்லை.


மாறாக அது ரேவதியிடம் பேசியது, ''ரேவதி, நான்தான் உன் விசிறி பேசுகிறேன். நான் மிகவும் களைத்துப் போய் விட்டேன். இருபத்தி நான்கு மணி நேரமும் சுற்றிக் கொண்டே இருக்கிறேன். என் சக்தியை நான் இழந்துவிட்டேன். இனி சுற்றமாட்டேன்'' என்றது.

''விசிறியே! உனக்கு ஏன் இப்படி ஆச்சு?'' என்று கேட்டாள் ரேவதி.

''எல்லாம் உன்னால் தான். நீ இல்லாத சமயத்திலும் என்னை வீணாக ஓடவிட்டாய். அதனால் மின் சாரமும் வீணானது. எனது சக்தியும் போனது. இனிமேல் நீ வெளியே செல்கையில் என்னையும் என் நண்பன் விளக்கையும் அணைத்துவிட்டுச் செல்வதாக உறுதி கொடு'' என்றது.


ரேவதி இதனை ஒப்புக்கொண்டாள். இனிமேல் அப்படியே நடப்பதாகச் சொன்னாள். உடனே விசிறி சந்தோஷத்தில் சுற்றியது. ரேவதி மகிழ்ந்தாள்!

- ச.சுவர்ணலட்சுமி,
எட்டாம் வகுப்பு, பாரதி வித்யாபவன், ஈரோடு





ஒலிம்பிக்



கண்ணைக் கவர்ந்த வண்ணக் காட்சிகள்


நமது தேசிய கீதம் இருபத்தெட்டு ஆண்டுகளுக்கு பிறகு ஒலிம்பிக்கில் கம்பீரமாக ஒலித்து, ஒவ்வொரு இந்தியனையும் தலை நிமிர வைத்துள்ளது. அதற்குக் காரணமான தங்க மகன் அபினவ் பிந்த்ராவுக்கு பாராட்டுகள்!

ஒலிம்பிக் போட்டிகளில் எந்த வீரர் தங்கம் வெல்கிறாரோ அவரது நாட்டின் தேசிய கீதம் அப்போது இசைக்கப்படும். அந்த வகையில் துப்பாக்கிச் சுடுதல் போட்டியில் அபினவ் பிந்த்ரா தங்கம் வென்றதும் பீஜிங் மைதானத்தில் இந்தியாவின் தேசியகீதம் ஒலித்தது. மேலும் ஒலிம்பிக்கில் தனி நபர் போட்டியில் தங்கம் வென்ற முதல் இந்தியர் என்ற சாதனையையும் படைத்தார்.

சும்மாவே பதக்கங்களைக் குவிப்பவர்கள் சீனர்கள். சொந்த மண்ணில் விளையாடுகையில் விடுவார்களா? தங்கம் மேல் தங்கமாக வாங்கி குவித்துவிட்டார்கள்.

நடந்து முடிந்த ஒலிம்பிக்கின் அசத்தல் காட்சிகள் இங்கே மூன்று பக்க ஆல்பமாக கொடுத்திருக்கிறோம். **பாருங்கள்... ரசியுங்கள்!**

ஆல்பம்!



✡ இந்தியாவுக்கு தங்கம் தந்த 'அபினவ் பிந்த்ரா'


ஒலிம்பிக் ஆல்பம்!



* முதல் தங்கம் வென்ற 'கத்ரினா எம்மன்ஸ்'




* துவக்க விழாவில் இந்திய வீரர்கள்



* சீனாவின் முதல் தங்க மங்கை 'சென் ஜிக்சியா'







* எட்டு தங்கங்களை வென்ற 'மைக்கேல் பெல்ப்ஸ்'

குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா நினைவுச் சிறுகதைப் போட்டி முடிவு - 2008



வழக்கம்போல் இந்த ஆண்டும் நிறையப் பேர் உற்சாகமாக கலந்துகொண் டிருக்கிறீர்கள். வித்தியாசமான கதைக் களன், அழகான கற்பனை, அற்புதமான எழுத்து நடை என அசத்தியுள்ளீர்கள். உங்களின் எழுத்து ஆர்வத்துக்கு வாழ்த்துகள்! இதோ முடிவை அறிவிக்கிறோம்!

முதல் பரிசு ரூ.1000/- பெறும் கதை : மயிலிறகு!

எழுதியவர் : **அ.வி.அஜிதா பாரதி**, பதினொராம் வகுப்பு, ஏ.கே.டி.அகாடமி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, கள்ளக்குறிச்சி

இரண்டாம் பரிசு ரூ.500/- பெறும் கதை : நான் நானாக...

எழுதியவர் : **எம்.எஸ். சுஹைல் அஹ்மத்**, ஒன்பதாம் வகுப்பு, நேஷனல் அகாடமி பள்ளி, கீழக்கரை

மூன்றாம் பரிசு தலா ரூ.250/- பெறும் கதைகள்

1. சுப்புவும் குட்டி தேவதையும்!

எழுதியவர் : **சி.மோனிஷா**, ஒன்பதாம் வகுப்பு, மூவேந்தர் மெட்ரிகுலேஷன் மே.நி. பள்ளி, பேராவூரணி

2. டிசம்பர் 6

எழுதியவர் : **டபிள்யூ. நடராஜன்**, பத்தாம் வகுப்பு, அரசினர் மேல்நிலைப் பள்ளி, புள்ளமங்கலம்

பரிசு பெற்றவர்களுக்கு பாராட்டுகள்;
கலந்துகொண்ட அனைவருக்கும் நன்றி!





அம்முவும்

குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா நினைவுச் சிறுகதைப் போட்டியில் **முதல் பரிசு ரூ.1000/-** பெறும் சிறுகதை

மீனாவும் சிறு வயதிலிருந்தே நெருங்கிய சிநேகிதிகள். இருவரும் பல குணங்களில் வேறுபட்டிருந்தாலும் படிப்பில் படு சுட்டிகள். சிறந்த நட்பின் உதாரணமாய் விளங்கினார்கள். மீனாவின் தாயும் தந்தையும் நல்ல வேலையில் உள்ளவர்கள். கை நிறைய சம்பாதிப்பவர்கள். மீனாவின் தேவைகள் அனைத்தையும் உடனே பூர்த்தி செய்து தங்கள் அன்பை வளர்த்துக்கொள்வர்.

மீனாவுக்கு 'தான்' என்ற எண்ணம் கொஞ்ச நாளாகவே தழைத்தோங்கியது. அவள் எப்போதும் தன்னையே புகழ்ந்து பேசிக்கொள்வாள். அம்மு, தோழிக்கென எதையும் விட்டுக் கொடுத்து நடப்பாள். மிகவும் அமைதியானவள். அம்முவின் தாய், அவளது பத்தாவது வயதிலேயே இறந்துவிட்டாள். அம்முவின் அப்பா ஏழ்மையில் இருந்தாலும், மகளை நன்றாகப் படிக்க வைத்து ஒழுக்கத்துடன் வளர்த்து ஆளாக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்.

அம்மு தன் தந்தை மனம் அறிந்த பொறுப்பான மகள். ஆனால், மீனாவோ இவளுக்கு நேரெதிர். சிறியவர், பெரியவர் என்று பாராமல் கோபத்தை அள்ளி வீசுவாள்.

அன்று அம்முவின் அம்மாவுடைய திதி. அம்மு அம்மாவின் படத்தை துடைத்து வைத்துக் கொண்டிருந்தாள். அவள் கையில் ஒரு பழைய ஆல்பம் கிடைத்தது. அது அம்மாவுடையது. அதன் நடுப் பக்கத்தில் ஓர் அழகிய மயிலிறகு இருந்தது. அது அம்முவை மிகவும் கவர்ந்தது. நீண்ட நேரம் அதையே உற்றுப்பார்த்துக் கொண்டிருந்தாள். அம்முவின் அப்பா இதனைப் பார்த்துவிட்டு அம்முவிடம் வந்து நின்று அவள் தலையைக் கோதினார்.

அப்பாவிடம் அந்த மயிலிறகை தான் எடுத்துக் கொள்வதாக சொன்னாள். தந்தை புன்னகையுடன் ஒப்புக்கொள்ளவே மகிழ்ச்சியில் விண்ணுக்கும் மண்ணுக்கும் குதித்தாள். தோட்டத்துக்கு ஓடி, தன் நண்பர்களாகிய எல்லா செடி கொடிகளுக்கும் மயிலிறகை காண்பித்தாள். அந்த மயிலிறகின் நடுவே உள்ள கருநீல நிறம் தாயின் கருவிழியை நினைவுபடுத்தியது. பச்சை நிறத்துடன் கூடிய நீலம், கருநீல நிறத்தை சுற்றிக் கிரீடம் அமைத்தார்போல் அத்தனை அழகு! அதைச் சுற்றியுள்ள காப்பிக் கொட்டை நிறம் மேலும் அழகூட்டியது. அதனைச் சுற்றியுள்ள பச்சையுடன் கூடிய ஊதா நிற இறகுகள் இரு வண்ணமாய் பளபளக்கும் அழகே தனி. தன் அம்மாவின் அழகிய கூந்தலை நினைவுபடுத்தியது. அந்த மயிலிறகில் பிடிக்காத பாகமேயில்லை. அவள் தன்னை மறந்து சளைக்காமல் தொட்டுத் தடவி முகத்திலும் மென்மையாக தடவிப் பார்த்து ரசித்தாள்.

பள்ளிக்கு எடுத்துச் சென்றால் காணாமல் போய்விடுமோ என்று பயம். எனவே பத்திர

- அ.வி. அஜிதா பாரதி



மாய் ஒரு புத்தகத்தில் சில மலர்களையும் இலைகளையும் படிய வைத்து அதனுடன் மயிலிறகை வைத்தாள். அதனை விட்டுச் செல்ல அவளுக்கு மனதே இல்லை.

பள்ளி சென்றும் தன் தோழி மீனாவிடம் மயிலிறகைப் பற்றியே பேசிக்கொண்டிருந்தாள். மீனாவுக்கோ அதை பார்க்க வேண்டுமென்ற ஆவல் உண்டாயிற்று.

அம்மு, புத்தகத்தின் நடுப் பக்கப்பத்தை திறந்தாள். அவளுக்கு அதிர்ச்சி! மயிலிறகு இல்லை.

மறுநாள், நன்கு யோசித்த பின்னர் தன் தோழியின் ஆவல் தீர்க்க அதனை பள்ளிக்கு எடுத்து வந்தாள். மயிலிறகின் அழகு மீனாவையும் விட்டு வைக்கவில்லை. மீனாவுக்கு அதனை சொந்தமாக்கிக்கொள்ளும் எண்ணம் ஏற்பட்டது.

அப்போது பள்ளியில் உணவு இடைவேளை. மீனா, அம்மு மற்றும் சக மாணவர்கள் உணவு உண்ண வெளியே வந்தார்கள். அம்மு, மயிலிறகு இருந்த புத்தகத்தை பையில் வைத்து மூடிவிட்டுச் சென்றாள். அன்று மீனா சற்று முன்னதாகவே உணவினை முடித்துக் கொண்டு வகுப்பறைக்குத் திரும்பினாள்.

பிற்பகல் பள்ளி மணி அடித்தது. அனைவரும் வகுப்பறைக்கு வந்து அமர்ந்தனர். அம்மு, தன் புத்தகத்தின் நடுப் பக்கத்தை திறந்தாள். அவளுக்கு அதிர்ச்சி காத்திருந்தது. அவளது மயிலிறகு இல்லை.

அதனுடன் வைத்த மலர்களும் இலைகளும் மட்டுமே இருந்தன. தவறுதலாக வேறு எங்கேனும் வைத்திருக்கக் கூடுமோ என்று தேடியும் கிடைக்கவில்லை. ஏமாற்றத்தில் அவள் கண்ணீர் கன்னங்களை கழுவியது. மீனா ஒன்றும் தெரியாததுபோல்



அமர்ந்திருந்தாள். பிற மாணவர்கள் என்னவென்று கேட்கவே, அம்மு தன் மயிலிறகை தொலைத்ததை கூறி அழுதாள். அதற்குள் விபரம் அறிந்து அங்கு வந்த ஆசிரியை, 'பிறர் பொருளுக்கு ஆசை படுவது தீய எண்ணம்' எனவே எவரேனும் தவறுதலாக எடுத்திருந்தால் திருப்பிக் கொடுக்குமாறு கூறினார்.

மீனாவின் மனம் நெருடியது. இருப் பினும் அவள் தன் குற்றத்தை ஒப்புக் கொள்ளத் துணியவில்லை. ஒருவரும் முன் வந்து உண்மையைக் கூறாததால் செய்தி தலைமை ஆசிரியரிடம் சென்றது. எவ்வளவோ முயன்றும் அம்முவின் அழு கையை அவர்களால் நிறுத்த முடிய வில்லை. தலைமை ஆசிரியர் அனைவரை யும் நோட்டமிட்டுவிட்டு அம்முவுக்கு ஆறுதல் கூறிவிட்டுச் சென்றார். மகிழ்ச்சி யுடன் பள்ளிக்கு வந்த அம்மு, சோகமாய் வீடு திரும்பினாள். மீனா அமைதியாக இருந்தாலும் உள்ளுக்குள் மயிலிறகு கிடைத்த மகிழ்ச்சி அவளுக்கு.



வீட்டுக்குள் குதித்துக்கொண்டே வந்த மீனாவுக்கு அம்மா ஒரு கொத்து மயி லிறகுகள் கொடுத்து, பள்ளி தலைமை யாசிரியர் மீனாவுக்கு தந்ததாக கூறினார். மீனாவின் கண்களில் கண்ணீர் தாரை தாரையாகக் கொட்டியது. தான் எடுத்ததை தலைமை ஆசிரியர் எப்படியோ கண்டு பிடித்தும் அவளை தண்டிக்காமல் அன் பாய் நடந்தது அவளுக்கு மேலும் குற்ற உணர்வை ஏற்படுத்தியது. அம்மாவிடம் தன் நடத்தைக்கு மன்னிப்பு கேட்டாள்.

"என்னிடம் கேட்காதே. நாளை பள்ளிக் குச் சென்று அம்முவிடமும் தலைமை யாசிரியரிடமும் மன்னிப்பு கேள்" என்றார் அம்மா.

மறுநாள் பள்ளிக்குச் சென்ற மீனாவிடம் அம்மு எப்பொழுதும் போல அன்பாக பேசினாள். மீனாவின் கண்களில் கண்ணீர் தேங்கியது. அவள் அனைவரின் முன் னிலையில் தன் தோழியிடம் மன்னிப்பு கேட்டுக்கொண்டு அவளது மயிலிறகை எடுத்துக் கொடுத்தாள். இதனை தொலை விலிருந்து பள்ளியின் தலைமை ஆசிரியர் பார்த்து புன்னகை புரிந்தார். ●

விளையாட்டு வீரர்களின் பூமி!

சுவாமி விவேகானந்தர், மகாகவி ரவீந்திரநாத் தாகூர், அன்னை தெரசா, நேதாஜி சுபாஷ் சந்திர போஸ், பொருளாதார மேதை அமர்த்தியா சென், திரைப்பட இயக்குநர் சத்யஜித் ரே என்று பல உலகப் புகழ்பெற்ற பெருமக்களை இந்தியாவுக்கு வழங்கிய மாநிலம் மேற்கு வங்காளம். இந்திய நாட்டின் பரப்பளவில் சுமார் 3% மட்டுமே கொண்ட மேற்கு வங்காளத்தில், இந்திய மக்கள்தொகையில் சுமார் 9% பேர் வசிக்கிறார்கள். ஒரு ச.கி. பரப்பில் 904 பேர் வசிக்கும் அளவுக்கு மக்கள்தொகை அடர்த்தி கொண்டது இம்மாநிலம்.

1876ஆம் ஆண்டு 'சுரேந்திரநாத் பானர்ஜி' இந்திய சங்கத்தை தோற்றுவித்தார். பிரிட்டிஷ் அரசாங்கத்தால் கைது செய்யப்பட்ட முதல் அரசியல் கைதி அவரே! வங்காளத்தில் சுதந்திரப் போராட்டத்தை அடக்க முடியாமல் ஆங்கிலேய அரசு திண்டாடியது. பிரிட்டிஷாரின் பிரித்தாளும் சூழ்ச்சியின்படி, பெரிய மாநிலமாக விளங்கிய மேற்கு வங்காளத்தை, அப்போது இந்தியாவை ஆண்ட பிரிட்டிஷ் கவர்னர் ஜெனரல் 'கர்சன் பிரபு' 1905 அக்டோபர் 16ல் இரண்டாகப் பிரித்தார். அதன்படி இந்துக்கள் அதிகமாக வாழ்ந்த மேற்குப் பகுதி மேற்கு வங்காளம் எனவும், முஸ்லிம்கள் அதிகமாக வாழ்ந்த கிழக்குப் பகுதி கிழக்கு வங்காளம் எனவும் அழைக்கப்பட்டது. 1947ல் இந்தியா சுதந்திரம் அடைந்த சமயத்தில் முஸ்லிம் மக்களை பெரும்பான்மையாகக் கொண்ட கிழக்கு

* தக்ஷிணேஸ்வரம் கோயில்



இந்திய நாடு... - 8



* விக்டோரியா மெமோரியல்

வங்காளம், பாகிஸ்தானுடன் இணைந்தது. (கிழக்குப் பாகிஸ்தான் 1971 டிசம்பரில் தனி நாடாகி, 'வங்காள தேசம்' என்ற பெயரைப் பெற்றது). 1919ல் ஜாலியன் வாலாபாக் படுகொலை நடைபெற்றபோது, அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாக, பிரிட்டிஷ் அரசு தமக்கு வழங்கிய knight என்ற பெருமைக்குரிய விருதைத் திருப்பி அளித்தார் ரவீந்திரநாத் தாகூர்.

மகாத்மா காந்தி அஹிம்சை வழியில் இந்திய சுதந்திரத்துக்காக போராடிக் கொண்டிருந்த வேளையில், ஆங்கிலேயருடன் நேரடியாக மோதி, இந்தியா விடுதலை பெற வழி செய்ய வேண்டும் என்ற கொள்கையினைக் கொண்டிருந்தவர் நேதாஜி சுபாஷ் சந்திர போஸ். அவர் துவக்கிய, இந்திய தேசிய ராணுவம் துரதிர்ஷ்டவசமாக சோகமான முடிவைச் சந்திக்க நேரிட்டது. தேசபந்து சித்தரஞ்சன் தாஸ், ராஷ்பேகாரி போஸ், ஸ்ரீ அரவிந்த கோஷ், பிபின் சந்திர பால் போன்றவர்கள் வங்காளத்தைச் சேர்ந்த முக்கிய சுதந்திரப் போராட்ட வீரர்கள்.

சுதந்திரப் போராட்டத்தில் பங்களிப்பு ஒரு பக்கமிருக்க, சமூக மறுமலர்ச்சிக்காக பல்வகை சீர்திருத்தங்களுக்கும் வங்காளம் பிள்ளையார் சுழி போட்டது. ராஜாராம் மோகன் ராய், ஈஸ்வர் சந்திர வித்யாசாகர் போன்றவர்கள், அன்றைய காலகட்டத்தில் நிலவிய சமூக அவலங்களை எதிர்த்து வன்மையாக குரல் கொடுத்தார்கள். குறிப்பாக, கணவன் இறந்தவுடன் மனைவியும் அவருடனே



* சத்யஜித் ரே




* லியாண்டர் பயஸ்

- கௌதம்ராம்

தீயில் இணைந்து சாக வேண்டும் என்ற சதிக் கொடுமைக்கு எதிராக இவர் நடத்திய பிரசாரத்துக்கு நல்ல பலன் கிடைத்தது.

பதினெட்டு மாவட்டங்களைக்கொண்ட மேற்கு வங்காள மாநிலத்தில் 37 ஆயிரத்து 945 கிராமங்களும் 375 நகரங்களும் உள்ளன. மாநிலத்தின் தலைநகரம் கொல்கத்தா. முன்பு இது 'கல்கத்தா' என்று அழைக்கப்பட்டது.

இம்மாநிலத்தின் பிரதான மொழி வங்காளம்.



✱ ஹௌரா பாலம்



✱ ஏஷியாடிக் சொஸைட்டி



✱ பண்டிட் ரவிசங்கர்

இது, உலகில் மிக அதிக மக்கள் பேசும் மொழிகள் வரிசையில் ஏழாவது இடத்தில் இருக்கிறது. 12ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வங்காள கவிஞரான 'ஜெயதேவர்' எழுதிய 'கீத கோவிந்தம்' இன்றும் பிரபலமாக விளங்குகிறது. இந்தியாவின் தேசிய கீதத்தை எழுதிய தாகூர், தேசியப் பாடலான வந்தே மாதரத்தை எழுதிய 'பக்கிம் சந்திரர்' இருவருமே இம்மாநிலத்தவர்தான். ஆண்டுதோறும் கொல்கத்தாவில் 'கொல்கத்தா புத்தகக் கண்காட்சி' நடைபெறுகிறது. இது ஆசியாவிலேயே மிகப் பெரியதும், உலகிலேயே இரண்டாவது பெரியதுமாகும்.

கலை உலகுக்கு மேற்கு வங்காளம் ஏராளமான ஓவியர்களையும், சிற்பிகளையும் அளித்துள்ளது.


1901ல் தாகூர் உருவாக்கிய 'சாந்தி நிகேதன்' உலகப் புகழ்பெற்ற இடமாகும். இங்கே விஸ்வபாரதி பல்கலைக்கழகம் இருக்கிறது. உலகப் புகழ்பெற்ற சிதார் இசைக்கலைஞர் பண்டிட் ரவிசங்கர், சரோத் இசைக் கலைஞர் உஸ்தாத் அலி அக்பர் கான், பரத நாட்டியக் கலைஞர் உதய சங்கர், மேஜிக் நிபுணர் பி.சி. சர்க்கார் போன்ற பலரும் மேற்கு வங்காளத்தைச் சேர்ந்தவர்களே! இந்திய திரைப்பட உலகில் வங்காள மொழிப் படங்களுக்கு தனி இடம் உண்டு. பெங்காலி திரைப்பட இயக்குநரான சத்யஜித் ரேவுக்கு, வாழ்நாள் சாதனையாளருக்கான ஆஸ்கார் விருது வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. திரைப்படம் போலவே வங்க மொழி நாடகங்களுக்கும் மக்கள் மத்தியில் வரவேற்பு இருக்கிறது.

மேற்கு வங்காளத்தில் இந்தியாவின்

தேசிய விளையாட்டான ஹாக்கி இன்றும் ஏராளமான ரசிகர்களைப் பெற்றுள்ளது. மேற்கு வங்காளத்தைச் சேர்ந்த ஹாக்கி வீரர் 'லெஸ்லீ கிளாடியஸ்' தலைமையிலான இந்திய ஹாக்கி அணி, மூன்று முறை தங்கப் பதக்கம் வென்றுள்ளது. உலகப் புகழ்பெற்று விளங்கும் டென்னிஸ் வீரர் லியாண்டர் பயஸ் இம் மாநிலத்தைச் சேர்ந்தவர். ஜோதிர்மயி சிக்கந்தர் இதே மாநிலத்தின் புகழ்பெற்ற தடகள வீரங்கனை. உலகப் புகழ்பெற்ற பல செஸ் வீரர்களை மேற்கு வங்காளம் உருவாக்கியுள்ளது. இங்கிலீஷ் கால்வாயை நீந்திக் கடந்த முதல் இந்தியர் 'மிகிர் சென்'. அதே சாதனையைச் செய்த ஆசியாவைச் சேர்ந்த முதல் பெண் வீராங்கனை 'ஆர்த்தி சாகா'. 1953ல் எவரெஸ்ட் சிகரத்தை முதலில் தொட்ட பெருமைக்குரியவர்களான எட்மண்டு ஹில்லாரி, டென்சிங் இருவரில் டென்சிங், மேற்கு வங்காளத்தின் டார்ஜிலிங் பகுதியைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

கொல்கத்தா நகரத்திலேயே சுற்றுலாப் பயணிகள் பார்க்க வேண்டிய இடங்கள் நிறைய உள்ளன. வெள்ளை பளிங்கு கொண்டு கட்டப்பட்ட வைஸ்ராய் நினைவு மாளிகை, 1874ஆம் ஆண்டில் துவக்கப்பட்ட பழைமையான மியூசியம், சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சம்பவங்களை நினைவூட்டும் கொல்கத்தா மியூசியம், 20 ஆயிரம் புத்தகங்களுக்கு மேல் கொண்ட நூல் நிலையம் உள்ள ஆசியாடிக் சொசைடி கட்டடம், அசுதோஷ் இந்தியக் கலை மியூசியம், பிர்லா அறிவியல் தொழில்நுட்ப மியூசியம், சுமார் 2500 டன் இரும்பு கொண்டு உருவாக்கப்பட்ட புகழ்பெற்ற ஹௌரா பாலம், பிர்லா கோளரங்கம் போன்றவை உள்ளன. கொல்கத்தா தேசிய நூலகம் உலகின் முக்கிய நூலகங்களுள் ஒன்று. இங்கே பல்வேறு மொழிகளிலுமாக 18 லட்சம் புத்தகங்கள் உள்ளன.

டார்ஜிலிங், மேற்கு வங்காளத்தில் உள்ள முக்கிய கோடை வாசஸ்தலமாகும். சுந்தரவன பகுதியில் உள்ள 'மாங்குரோவ் காடுகள்' சுற்றுச் சூழலுக்கு ஏற்றவை. இங்குள்ள வனப் பகுதியில் 'ராயல் பெங்கால்' புலிகள் சரணாலயம் இருக்கிறது.



* ரவீந்திரநாத் தாகூர்



* ராஜாராம் மோகன் ராய்



* கொல்கத்தா அருங்காட்சியகம்





உயிருள்ள கதைகள்!

'**ப**க்குவம்' என்பது பெரியோர் சொல்லில் உண்டு. கேட்கத் தவறினால் 'கொட்டு' வாங்க வேண்டியதுதான் என்பது 'பெரியோர் சொல்' படக்கதை மூலம் புரிந்தது!

- ஆர்.பி.வளர்மதி,
செல்வமருதூர்

அகர வரிசைக் கதைகள் மிகவும் நன்றாக இருந்தன. அதிலும், உயர்ந்த பரிசு கதை மிக மிக அருமை. சண்முகம் போல இருக்க நானும் பழகுவேன்!

- என்.ராமசந்திரன், விழுப்புரம்

உயிர் எழுத்து வரிசையில் வெளியான அத்தனை கதைகளும் உயிருள்ளவையாக அமைந்திருந்தது!

- ஜி.சுந்தரராஜன், திருத்தங்கல்

அகர வரிசைக் கதைகள் பன்னிரண்டுமே எக்ஸ்பிரஸ் பகுதியை அழகாக அலங்கரித்தது!

- பா.விக்னேசுவரன்,
பா.தர்ஷிணி, குட்டம்

எனது உறுப்பினர் எண் 626. பெயர் கே.எம். கார்த்திக். ஆகஸ்ட் இதழில் கே.எம்.சாந்தி என அச்சிடப்பட்டுள்ளது.

- கே.எம்.கார்த்திக், கும்பகோணம்


(தவறுக்கு வருந்துகிறோம்)

- ஆர்





படிச்சீங்களா?



விண்வெளிக் கதைகள்

ஆசிரியர் : சுப்ர. பாலன், வெளியீடு : வானதி பதிப்பகம், 23, தீனதயாளு தெரு, தி.நகர், சென்னை-17, விலை:ரூ.30/-

கோகுலம் இதழில் தொடராக வெளியான சிறுகதைகளின் தொகுப்பு. வான மண்டலத்திலுள்ள கோள்கள் ஒவ்வொன்றுக்கும் கிரேக்கக் கடவுள்களின் பெயர்களே சூட்டப்படுகின்றன. அந்தப் பெயர்களில் சுவையான கற்பனையைச் சேர்த்து கதைகள் சொல்லப்பட்டுள்ளன. கூடவே, கோள்களைப் பற்றிய அறிவியல் செய்திகளும் படங்களும் நமது அறிவுக்கு விருந்தாக உள்ளன!

அறிவியல் அறிஞர் ஹென்றி ஃபோர்டு

ஆசிரியர் : கள்ளிப்பட்டி சு.குப்புசாமி வெளியீடு : பழனியப்பா பிரதர்ஸ், 25, பீட்டர்ஸ் சாலை, சென்னை - 14. விலை ரூ.20/-

விஞ்ஞானி ஹென்றி ஃபோர்டு பற்றிய வாழ்க்கை வரலாறை எளிய நடையில் கதைபோல் சொல்லும் நூல். இடையிடையே இடம்பெற்றுள்ள ஓவியங்களையும் பார்க்கையில் அறிவியல் செய்தியைப் படிப்பது போலவே இல்லை. விறுவிறுப்பான நாவலைப் படிப்பது போலுள்ளது. நல்ல முயற்சி!

ஆலம் விழுது

ஆசிரியர் : டாக்டர் பூவண்ணன், வெளியீடு : விகடன் பிரசுரம், 757, அண்ணாசாலை, சென்னை - 2, விலை : ரூ.50/-

தமிழின் சிறந்த குழந்தை எழுத்தாளர்களில் பூவண்ணனும் ஒருவர். இத்தொகுப்பில் இரண்டு நாவல்கள் இடம் பெற்றுள்ளன. ஒன்று சுறுசுறுப்பான சமூக நாவல், அடுத்தது பரபரப்பான மாயாஜால நாவல். படிக்க ஆரம்பித்தால் முடித்த பிறகுதான் புத்தகத்தைக் கீழே வைக்கத் தோன்றுகிறது.


இரண்டாயிரம் பொற்காசுகள்!
கதை :
ஜிங்கிள் பெல் கிரியேஷன்ஸ்
தமிழ் வடிவம் :
மித்ரா
அக்பரின் அவையில் இப்னு ஜமால் என்ற பாடகர் இருந்தார்.
பாடல் முடிந்ததும்
பீர்பால்!
அக்பர் அழைக் கிறார்.
நூறு தாமிரக் காசுகள் கொடுங்கள்.
நான் எதிர்பார்த்தது தான்!
இப்னு ஜமால் சென்றதும்...
அரண்மனை கலைஞர்களை பேரரசர் அலட்சியப்படுத்து கிறார்.
பாவம் இப்னு, மற்றவர்கள் அரசரைப் புகழ்ந்து பாடுவ தால், பொற்காசுகளைப் பெறுகின்றனர்.




ஒருநாள் திருவேங்கிடி என்ற பாடகர் வந்தார்.
பேரரசர் நீடூழி வாழ்க...
சரி...
உம்மைப் போன்ற கலைக் காதலன், இப்பேரரசின் பொக்கிஷம்!
ம்...
ஓ...! இதற் காகவே ஐந்நூறு பொற்காசு களைப் பெற்றுவிடுவான்.
என்னைப் போன்ற ஏழைக் கலைஞர்களுக்கு நீங்கள் ஒரு கடவுள்!
ஓஹோ...!
இப்போ, ஆயிரம் பொற்காசு களை இவன் பெறலாம்!
திருவேங்கிடி பாடத் தொடங்கினார்.
என்ன ஒரு கொடூரமான குரல்!



ஆனால், பேரரசர் இதைவிடச் சிறந்த பாடலைக் கேட்டதேயில்லை என்பதைப் போல நடந்துகொண்டிருக் கிறார்!
ஆனால், அவர் என்ன நினைத்துக் கொண்டிருக் கிறார் என்பது எனக்குத் தெரியும்.
என்னைக் கலைஞர்களின் கடவுள் என்று சொல்லி விட்டானே..
பாடல் முடிந்ததும் -
அற்புதம்!
பீர்பால், இவர் ஆயிரம் பொற்காசு களைப் பெறத் தகுதியுள்ளவர்தானே?
அதைவிட அதிகம் தரலாம் மன்னா!
இவருக்கு இரண்டாயிரம் பொற்காசுகள் கொடுக்க வேண்டும்.


எவ்வளவு கருணையுள்ளம் பீர்பாலுக்கு!
பீர்பால், ஏன் இரண்டாயிரம் பொற்காசுகள்?
?!?!
ஆயிரம் பொற்காசு கள் உங்களை மகிழ்வித்ததற் காக...
அவையோரைத் தூங்க வைத்ததற்கு ஆயிரம் காசுகள்!
ஹாஹா!
ஹா... ஹா... திரு வேங்கிடி, கேட்டீரா?
'ச்சை! பீர்பால் சொதப்பிட்டாரே...
திருவேங்கிடி வேகமாக வெளியேறினார்.



உறியடி ஆட்டம்!

''**உறியடி** விளையாட்டுன்னா என்ன தெரியுமா?'' என்று கேட்டாள் தமிழ்ச்செல்வி.

ரஞ்சன் சங்கடத்துடன் நெளிந்தான்.

''என்னடா, உறியடின்னா என்னன்னே தெரியலியா?'' என்று கேட்டார் சித்தப்பா.

ரஞ்சன் 'ஆமாம்' என்பதுபோல் தலையசைத்தான். தமிழ்ச்செல்விக்கு 'குபுக்' கென்று சிரிப்பு வந்துவிட்டது.

''கிருஷ்ணர் சின்ன வயசிலே வெண்ணெய் திருடுவார், தெரியும் இல்லையா?'' என்றாள்.

''எனக்கு கிருஷ்ணர் கதை முழுசும் தெரியும். அமர் சித்ர கதாவிலே படிச்சிருக்கேன்'' என்றான் ரஞ்சன் ரோஷத்துடன்.

''சரி! சரி! சண்டை போட்டுக்காதீங்க. வெண்ணெய், நெய் எல்லாம் அடுக்கடுக்கா பானையிலே வச்சு உயரே கயிற்றிலே மாட்டி வைப்பாங்க. அதைத்தான் உறின்னு சொல்லுவாங்க'' என்றார் சித்தப்பா.

ரஞ்சனுக்குப் புரிந்துவிட்டது. ஆனால் உறியடி விளையாட்டு என்பது என்ன? ''அது சின்னப் பசங்க விளையாடும் ஏதாவது விளையாட்டா சித்தப்பா?'' என்று கேட்டான்.

''இல்லை. அதையும் ஒருவித கிராமியக் கலைன்னே சொல்லலாம். அதைப் பெரும்பாலும் கோயில்களிலேதான் ஆடுவாங்க. திருவிழாவை முன்னிட்டு நம்ம கிராமத்துக் கோயிலிலே உறியடி உற்சவத்துக்கு ஏற்பாடு செய்திருக்காங்க. போய்ப் பார்க்கலாமா?'' என்றார்.

அதைவிட வேறென்ன வேலை? ரஞ்சன் உற்சாகமாகக் கிளம்பினான். கூடவே தமிழ்ச்செல்வியும்!

கோயிலுக்கு வெளியே மிகவும் உயரமான கம்புகள் நட்டிருந்தனர். அவற்றின் குறுக்கே ஒரு கம்பு கட்டப்பட்டிருந்தது. அதிலிருந்து ஓர் உறி தொங்கிக் கொண்டிருந்தது.

''அந்த உறியிலே இருக்கும் மண் பானைக்குள்ளே தயிர் இருக்கும். ஒரு ரூபாய் காசும் இருக்கும்'' என்றாள்

- அருண் சரண்யா

தமிழ்ச்செல்வி.

அப்போது ஒருவர் அங்கு வந்தார். வயதில் பெரியவராக இருந்த அவர் ஒரு வினாயகர் பாட்டைப் பாடினார். பாடும் போது கையில் இருந்த தாளத்தாலும் இசை எழுப்பினார். பிறகு கண்ணன் மீது ஒரு பாட்டுப் பாடினார்.

''இப்போ அவங்க மூணு பேரும் வருவாங்க'' என்றார் சித்தப்பா. அவர் விரல் நீட்டிய திசையில் மூன்று பேர் நின்றுகொண்டிருந்தார்கள். தலை முடி அழகாக வாரி முடியப்பட்டிருந்தது. மயிலிறகு செருகியிருந்தனர். முகத்தில் நீல வண்ணத்தைப் பூசி, கொஞ்சம் ஜிகினாவும் தடவி இருந்தார்கள். கால்களில் சலங்கை கட்டியிருந்தார்கள்.

''எதுக்காக நீலக் கலரை முகத்திலே

கிராமியக் கலைகள் - 8





தடவியிருக்காங்க?'' என்று கேட்டான் ரஞ்சன்.

''கண்ணன் நீல வண்ணக்காரன்தானே. இவங்களும் கண்ணன் மாதிரி உறியில் இருக்கிற பால், தயிரையெல்லாம் எடுக்க முயற்சிப்பாங்க. அதனாலே கண்ணன் வேஷம் போட்டுக்கிட்டிருக்காங்க.''

பாடுபவர் குரலை மிகவும் உயர்த்திப் பாடி சட்டென்று நிறுத்தினார். அப்போது கண்ணனைப்போல வேடம் அணிந்திருந்த மூன்றுபேரில் ஒருவர், உறி தொங்கிக்கொண்டிருந்த இடத்துக்குக் கீழே வந்து நின்றார். அவர் கையில் சிறிய கம்பு இருந்தது. அதை அப்படியும் இப்படியும் சுழற்றிக்கொண்டே கூட்டத்தினரை வலம் வந்தார். பிறகு, மிகவும் உயரத்தில் இருந்த உறியை ஏதோ அம்பு எய்வது போல கம்பால் குறி பார்த்தார்.

அப்போது உறியை இழுப்பவர் முன்னுக்கு வந்தார். அவர் ஒரு சாமந்திப்பூ மாலையை அணிந்திருந்தார். மெல்ல உறியைக் கீழே இறக்கினார். ஆட்டக்காரர் தன் கம்பால் அதை அடிக்கப் போனார்.

ஆனால், உறி இழுப்பவர் மிகவும் சாமர்த்தியமாக சரியான சமயத்தில் உறியை மேலே இழுத்துவிட்டதால் கம்பு அதன் மீது படவில்லை. கூட்டம் கை தட்டியது. மேலும் சில முறை ஆட்டக்காரரும் உறி இழுப்பவரும் தங்களது சாமர்த்தியத்தைக் காட்டினர். பிறகு மேலும் இரண்டு ஆட்டக்காரர்கள் ஆளுக்கொரு கம்புடன் வந்துசேர, ஆட்டம் களை கட்டியது. மூன்று பேருக்கும் எதிராக தனி ஒருவராக உறி இழுப்பவர் சமாளித்துக்கொண்டிருந்தார். உறி மேலும் கீழுமாக ஏறி இறங்கியது.

ஒரு கட்டத்தில் ஓர் ஆட்டக்காரர் தன் கம்பை கலயத்தின் மீது ஓங்கி அடிக்க கலயம் உடைந்தது. எல்லோரும் கைதட்டி மகிழ்ந்தனர். ரஞ்சனும் சந்தோஷத்துடன் கைகளைத் தட்டி பாராட்டினான்.

துளிகள்...

* உறியடி விளையாட்டுக் கலை வட இந்தியாவிலும் உண்டு.
* சில சமயம் ஆட்டக்காரர்கள் கிரீடமும் அணிந்திருப்பார்கள். அந்த கிரீடத்தின் மீது மயிலிறகைச் செருகி இருப்பார்கள்.
* பெரிய அளவில் நடக்கும் விழாக்களில் பின்னணி இசைக் கலைஞர்களும் பங்கு பெறுவார்கள்.
* சில சமயம் உறியை இழுப்பவர் மிகவும் வேகமாக இழுத்துவிட்டால் மாட்டப்பட்டிருக்கும் கம்பின் மீதே மண் கலயம் வேகமாகப் பட்டு உடைந்துவிடும். அப்போது ஆட்டக்காரர்கள் ஜெயித்ததாக அர்த்தம். ஆனால் பார்வையாளர்கள் ஏமாற்றம் அடையக் கூடாதே. எனவே வேறொரு பானையைத் தயாராக வைத்திருப்பார்கள். அதில் பாலோ, தயிரோ நிரப்பப்பட்டு உறியடி விழா தொடரும்.



கோகுலம் எக்ஸ்பிரஸ்



* மீமாவைக் கூட்டிப் போன மாய ஊர்தியைச் சந்திக்கணுமா?

* மீன்களே இல்லாத கடலைப் பார்க்கணுமா?

* நாட்டுக்குப் போன சிங்கராஜாவை 'மீட்' பண்ணணுமா?


* புதிர்களோடு புகுந்து விளையாடணுமா?

* எலி கந்தன் என்ன ஆனான் தெரியுமா?

* பம்பரமும் கண்ணாமூச்சி விளையாட்டும் ஆடிப் பாடணுமா?



உள்ளே வாங்க.... →



மீமாவும்

ஓர் ஊரில் மீமா என்ற சுட்டிப்பெண் இருந்தாள். இவள் படிப்பில் மிகவும் கெட்டிக்காரி. ஆனால் யாருக்கும் உதவி செய்யமாட்டாள். மீமாவின் பெற்றோர் அவளுக்கு பல முறை அறிவுரை கூறியும் அவளது குணம் மாறவேயில்லை.

ஒருநாள் மீமா பால்கனியில் விளையாடிக் கொண்டிருந்தாள். அப்போது எங்கிருந்தோ பறந்து வந்த ஒரு வித்தியாசமான வாகனம் மீமாவின் மாடியில் இறங்கியது. அந்த ஊர்தி மீமாவை ஏறச் சொன்னது. அதில் ஏற்கெனவே இரண்டு சிறுவர்களும் ஒரு சிறுமியும் இருந்தனர். அதனால் மீமாவும் தைரியமாக ஏறிக்

- சு. துர்காதேவி,
பத்தாம் வகுப்பு, வேளாங்கண்ணி மாதா மேல்நிலைப் பள்ளி, சிவகாசி.




கொண்டாள்.

மாய ஊர்தி சட்டென வானில் பறந்தது. ''சிறுவர்களே உங்களை வித்தியாசமான பல உலகங்களுக்கு அழைத்துச் செல்லப் போகிறேன். விரும்பும் உலகில் நீங்கள் இறங்கிக்கொள்ளலாம்'' என்றது.

சிறிது தூரம் சென்றதும் ஐஸ்கிரீம் உலகம் வந்தது. அங்கு வெண்ணிலா, சாக்லெட், பிஸ்தா என எல்லா வகை ஐஸ்கிரீம்களும் இருந்தன. ஒரு சிறுவன் ''நான் இங்கு இறங்கிக் கொள்கிறேன்'' என்றான். மாய ஊர்தியும் ''சரி'' என்று அச்சிறுவனை அந்த உலகில் இறக்கிவிட்டது. பிறகு, ''நான் நாளை வந்து உன்னை அழைத்துச் செல்கிறேன். அதுவரை இங்கு நீ எவ்வளவு ஐஸ்கிரீம் வேண்டுமானாலும் சாப்பிடலாம்'' என்று கூறி மீண்டும் பறந்தது.

இரண்டாவதாக புத்தக உலகம் வந்தது. அந்த உலகில் ஒரு சிறுமி இறங்கிக்கொண்டாள். முன்பு கூறியது போலவே மாய ஊர்தி, ''நீ இங்கு எந்த புத்தகத்தையும் படிக்கலாம், நாளை வந்து உன்னை அழைத்துச் செல்கிறேன்'' என்று கூறிச் சென்றது.



அடுத்து ஒரு சிறுவனை பொம்மை உலகில் இறக்கியது. அங்கே சுண்டு விரல் அளவு பொம்மை முதல் ஆறடி உயரம் வரை விதவிதமான பொம்மைகள் இருந்தன.

மாய ஊர்தியும்!

இறுதியாக மீமா மட்டும் இருந்தாள். மீமா, தான் இறங்கும் இடத்தை ஆர்வமாக எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள். மாய ஊர்தி பறந்தது. நீண்ட தூரம் வந்ததும் மீமா இறங்கும் இடத்தைக் காட்டியது. மீமாவுக்கு மிகவும் அதிர்ச்சியாய் இருந்தது.

அங்கு நிறைய பாத்திரங்கள் கழுவாமல் இருந்தன. மாய ஊர்தி கோபத்துடன் ''நான் நாளை வருவேன். அதற்குள் இங்குள்ள அனைத்து பாத்திரங்களையும் கழுவிச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும்'' என்று கூறியது.

மீமாவுக்கு மிகவும் வருத்தமாக இருந்தது. அவள் அழுதுகொண்டே ''எனக்கு மட்டும் ஏன் இந்தத் தண்டனை?'' என்று கேட்டாள்.

அதற்கு மாய ஊர்தி ''இதற்கு முன் இறங்கிய சிறுவர்கள், மற்றவருக்கு



''மீமா சீக்கிரம் எழுந்து பள்ளிக்குச் செல்'' என்றார் மீமாவின் அம்மா. மீமாவுக்கு தான் கண்டது கனவு என புரிந்தது!

கனவாயிருப்பினும் மீமா தன் தவறை உணர்ந்தாள். அதன் பின் அவள் அனைவருக்கும் உதவினாள்.

தேவைப்படும்போது உதவினர். எனவே அவர்களுக்கு மகிழ்ச்சியைத் தரும் உலகம் கிடைத்திருக்கிறது. ஆனால் நீயோ யாருக்கும் உதவவில்லை. எனவே உனக்கு இவ்வுலகம்'' என்று கூறிப் பறந்தது.

அப்போது ஒரு குரல் ''மீமா! மீமா எழுந்திரு'' என்றது. மீமாவும் திடுக்கிட்டு எழுந்தாள்.





வின்னர்ஸ்!

விடையைச் சொல்; பரிசை வெல் - 13ல் கலந்து கொண்டு சரியான விடைகளை நூற்றுக்கணக்கானோர் அனுப்பி இருந்தனர். ஆகவே, பரிசுத் தொகையான ஆயிரம் ரூபாயை குலுக்கல் மூலம் பத்து பேருக்கு தலா **ரூ.100/-** வீதம் வழங்குகிறோம்.

சரியான விடைகள் :

1. பீஸ்டா டிரைபோ, 2.சுசேதா கிருபளானி, 3.உடலுக்குக் குளிர்ச்சி 4.1856, 5.கிருத்திகா

பரிசு பெறுவோர் :

1.கு.பிரவீன்குமார் - சென்னை
2.கே.கோகுல்ராஜ் - ஆண்டிபட்டி
3.எம்.ஹர்ஷினி - திருச்சி
4.உ.மதன்ராஜ் - வீரன்வயல்
5. ப.பத்மபிரியா - விருதுநகர்
6. டி.கிருஷ்ணகான் - கும்பகோணம்
7. பா.கார்த்திகா - கீழச்சீவல்பட்டி
8. கா.அருணாச்சலம் - திருவண்ணாமலை
9. எஸ்.அனுஜா - திருச்சி
10. பி.மோசிக்கீரன் - மங்கலம்பேட்டை

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள்; கலந்துகொண்ட அனைவருக்கும் நன்றி!



இங்குள்ள
படத்தை உங்கள்
கைவண்ணத்தால்
அழகுபடுத்துங்க
குட்டீஸ்!



வண்ணம் தீட்டுங்கள்!

உங்கள்





கே.விக்னேஷ்,
உறுப்பினர் எண் : 454,
எட்டாம் வகுப்பு, ஸ்ரீ வெங்கடேஸ்வரா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, திருவள்ளூர்





சி.நிவேதிதா,
ஐந்தாம் வகுப்பு,
அருள் சாஸ்த்தாலையா மேல்நிலைப் பள்ளி,
புதுச்சேரி






கு.தமிழ்ச்செல்வன்,
ஏழாம் வகுப்பு,
அரசு உயர்நிலைப் பள்ளி,
புலியூர்

கைவண்ணம்!



ஆர்.ப்ரசிஜா,
இரண்டாம் வகுப்பு, செயின்ட் பிரிட்டோஸ் அகெடமி, சென்னை



ஏ.ஸ்வேதா புஷ்பா,
ஒன்பதாம் வகுப்பு, செயின்ட் ஜோசப் பெண்கள் மேல்நிலைப் பள்ளி, திண்டுக்கல்







மீன்களே இல்லாத

கடல் என்றாலே அதில் உள்ள மீன்கள் முதல் கப்பலையே கவிழ்க்கும் திமிங்கலங்கள் வரை அங்கே வாழும் பல விதமான உயிரினங்கள் நினைவுக்கு வரும். ஆனால், எந்த ஒரு உயிரினமும் வாழ முடியாத ஒரு கடல் உள்ளது.

'டெட் ஸீ' என ஆங்கிலத்தில் அழைக்கப்படும் அந்த 'செத்த கடல்' ஜோர்டானுக்கும் இஸ்ரேலுக்கும் இடையில் அமைந்துள்ளது. இந்தக் கடலில் மீனோ, தாவரமோ கிடையாது.

நாற்பத்தெட்டு மைல் நீளமும் பதினொரு மைல் அகலமும் கொண்ட இந்த கடலின் மற்றொரு அதிசயம் என்னவென்றால், இந்தக் கடலை நேரில் பார்ப்பதற்குக் கிணற்றுக்குள் இருக்கும் தண்ணீரை அதன் மேற்பரப்பில் நின்று பார்ப்பதுபோல் இருக்கும். தரைப் பரப்பில் இருந்து இந்தக் கடல் தாழ்ந்து அமைந்திருப்பதே, இவ்வாறு காட்சி அளிப்பதற்குக் காரணம். தரை மட்டத்தில் இருந்து 1300 அடி கீழே பள்ளமாக அமைந்துள்ளது. இதனால் உலகிலேயே மிகவும் தாழ்வான கடல் என்ற பெயரையும் பெற்றுள்ளது.

இந்தக் கடலில் மீன்கள் ஏன் உயிர் வாழ்வதில்லை?

பொதுவாகக் கடல் தண்ணீரில் நான்கு முதல் ஆறு சதவிகிதம் உப்பு நிறைந்திருக்கும். ஆனால் இந்தக் கடலின் தண்ணீரிலோ 23 முதல் 25 சதவிகிதம் வரை உப்பு உள்ளது. இத்துடன் பல இரசாயன உப்புகளும் கரைந்திருப்பதால் இக்கடலின் நீர், ஏறத்தாழ விளக்கெண்ணெய் மாதிரி பிசுபிசுவென அதிக அடர்த்தியாக உள்ளது. இந்தக் கடலில் மனிதர்களால் நீந்தவும் முடியாது.

மற்ற கடல்கள் பரப்பளவில் மிகப் பெரியவை. மேலும் நல்ல தண்ணீரைக் கொண்ட பல ஆறுகள் தம்முடன் இணையும் வாய்ப்பைப் பெற்றுள்ளன. இதனால் அந்தக் கடல்களின் தண்ணீரில் உப்பின் சதவிகிதம் அதிகரிப்பது இல்லை.

- ப. இனியன்,
உறுப்பினர் எண் : 35,
பன்னிரண்டாம் வகுப்பு,
ஜெயகோபால் கரோடியா
மேல்நிலைப் பள்ளி, சென்னை.



கடல்!

ஆனால் செத்த கடலில் அப்படி இல்லை. 'ஜோர்டான் ஆறு' என்ற ஒரே ஆறுதான் இங்கு கலக்கிறது.

ஆனால் ஆரம்ப காலத்தில் இந்தக் கடல் மிகவும் தூய்மையான நீரைக் கொண்ட மிகப் பெரிய ஏரியாக இருந்ததாம். பல இலட்சம் வருடங்களுக்கு முன்பு உலகில் உயிரினம் தோன்றியிராத காலத்தில், இந்தக் கடல் மத்திய தரைக் கடலைவிட ஆயிரத்து நானூறு அடி அதிகமான உயரத்தில் அமைந்த நல்ல தண்ணீர்க் கடலாக இருந்ததாம். ஆனால் நாள் செல்லச் செல்ல உலகில் ஏற்பட்ட வறட்சிகள், நில நெகிழ்ச்சிகள் இந்தக் கடலின் அளவைக் குறைத்து, இதை ஒரு பள்ளத்துக்குள் தள்ளி விட்டன என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்.



மேலும் இந்தக் கடலில் 'மீன்களின் பலி பீடம்' என்றழைக்கப்படும் ஓர் இடமும் உள்ளது. ஜோர்டான் ஆறு இந்தக் கடலுக்குள் கலக்கத் தொடங்கும் இடமே அவ்வாறு அழைக்கப்படுகிறது.

ஏன் அப்படி?

நல்ல தண்ணீரைக் கொண்ட ஜோர்டான் ஆறு, இந்தக் கடலுக்குள் நுழையும்போது அந்த ஆற்றுடன் வரும் மீன்களும் இந்தக் கடலுக்குள் நுழையும் அல்லவா? அப்படி நுழைந்த சில நிமிடங்களிலேயே அவை இந்தக் கடலின் நீர்த்தன்மை காரணமாகச் செத்துவிடும். இந்த செத்த மீன்களைத் தூக்கிச் செல்ல கழுகுகளும் மற்ற பறவைகளும் இந்த இடத்தில் பறந்தபடி இருக்கும்.

இந்தக் கடலில் மீன் வளம் இல்லையென்றாலும் பொட்டாஷ், மக்னீசியம் குளோரைடு, புரோமின் போன்ற இரசாயன உப்புகள் பெருமளவில் உள்ளன. செயற்கை உரம் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் பொட்டாஷ் உப்பு மட்டும் ஏறத்தாழ இருபது இலட்சம் டன் அளவுக்கு இந்தக் கடலில் உள்ளது எனக் கணக்கிட்டுள்ளனர்.

நாட்டுக்குப் போன
சிங்கராஜா!



வசீகரன்

கதைப் பாடல்

அந்தக்காட்டை கொடிய சிங்கம் ஆண்டுவந்தது
அடக்குமுறை சட்டத்தால் ஆட்டம் போட்டது
எதிர்த்துப்பேச யாரும் வந்தால் கதைமுடிந்தது
எத்தனை நாள்தான் இதனைப் பொறுத்துச்செல்வது?

அஞ்சிஅஞ்சி வாழ்வதுவும் வாழ்க்கை யாகுமோ
அதனைவிட மாய்ந்துபோதல் இனிமை ஆகுமே
என்றுசொல்லி விலங்கினங்கள் விரக்தி அடைந்தன
எப்படி சிங்கத்தை ஒழிப்பதென திட்டமிட்டன

தந்திரத்தால் சாய்ப்பதென நரியும் சொன்னது
தங்களுக்குள் தலைவனாய் அதுவே நின்றது
''சிங்கராஜா பிறந்தநாளில் ஒன்றாய்க் கூடுவோம்
அந்தநாளில் அதனைஒழிக்க ஆயத்தம் செய்வோம்''

நரிசொன்ன யோசனையை அனைத்தும் ஏற்றன
பிறந்தநாளில் ஒன்றுசேர்ந்து ஆட்டம் போட்டன
கொடிகட்டி வெடிபோட்டு துள்ளி மகிழ்ந்தன
வானளாவ சிங்கத்தைப் புகழ்ந்து பாடின


''அந்தநேரம் நரியும் சிங்கம் அருகில்சென்றது
உம்மைப்போல் வீரன்இல்லை'' என்று புகழ்ந்தது
''காட்டைமட்டும் ஆண்டால் போதுமா நீங்கள்
நாட்டைஆளும் காலம்வேண்டும்'' என்று சொன்னது

''ஒருமுறை நாடுவலம் சென்று வாருங்கள்
மனிதர்களை வென்றுபுகழ் மிஞ்சி வாருங்கள்''
மறுநாளே நாடுவலம் சிங்கம் போனது
இரண்டு ஓநாய் மந்திரிகளைக் கூட்டிச்சென்றது

சிங்கம்பார்த்த மனிதர் சிதறி ஓடினர்
செய்திகேட்டு காவலர்கள் பதறி வந்தனர்
மனிதர்ஓடும் காட்சியினை சிங்கம் கண்டுமகிழ்ந்தது
அப்பொழுது டுமீல்டுமீல் சப்தம் கேட்டது

குண்டுபாய சிங்கராஜா செத்து மாய்ந்தது
சிங்கம்செத்த செய்திகேட்டு காடு மகிழ்ந்தது
அடுத்தராஜா யார்என்ற கேள்வி எழுந்தது
வாக்குச்சீட்டில் தேர்ந்துஎடுக்க முடிவுஆனது





தெரியாது! தெரியாது!

- பெங்குவின் பறவைக்குப் பறக்கத் தெரியாது.
- பபூன் குரங்குக்கு மரம் ஏறத் தெரியாது.
- குயிலுக்குக் கூடு கட்டத் தெரியாது.
- ஹம்மிங் பறவைக்கு நடக்கத் தெரியாது.
- ஹைனா செந்நாய்களுக்குக் குரைக்கத் தெரியாது.
- 'தோட்ட விலாங்கு' என்ற மீனுக்கு நீந்தத் தெரியாது.
- குதிரைக்கு படுத்துத் தூங்கத் தெரியாது.

- ஜி.ரங்கராஜன்,
உறுப்பினர் எண் : 480,
சென்னை

சகோதரர்களே...

சுவாமி விவேகானந்தரின் பொன்மொழிகள்

1. என் சகோதரர்களே! நாம் அனைவரும் கஷ்டப்பட்டு உழைப்போம். தூங்குவதற்கு இது தருணமல்ல, எதிர்கால இந்தியா உருவாகி வருவது நம் உழைப்பையே சார்ந்திருக்கிறது.

2. நம் துன்பங்கள் அனைத்துக்கும் பெரும் காரணம் அச்சம்தான்.

3. நீங்கள் பலவீனமானவர்கள் என்று எண்ணிக் கொண்டிருந்தால் நீங்கள் பலமற்றவர்களாகவே ஆகிவிடுவீர்கள். நீங்கள் பலம் பொருந்தியவர்கள் என்று எண்ணினால் பலமுடையவர்களாக ஆவீர்கள்.

4. எழுந்து நில்! தைரியமாக இரு! பலத்துடன் இரு! பொறுப்பு முழுவதையும் உன் தோள்மீது ஏற்றுக்கொள்!

- கே.எஸ்.யோகேஷ்வரன், உறுப்பினர் எண் : 146, ஏழாம் வகுப்பு,
இராக்போர்ட் மெட்ரிக் மேல் நிலைப் பள்ளி, திருச்சி



உறுப்பினர் பக்கம்



அப்படியா?

✱ முதல் லேசரைக் கண்டறிந்தவர் தியோடோர் மெய்மேன்.

✱ ஒரு விமானத்தின் சத்தம் 100 முதல் 200 டெசிபல்கள் .

✱ நியான் வாயு சிவப்பு நிறத்தில் இருக்கும்.


✱ புகைக் கூடுகள் பதிமூன்றாம் நூற்றாண்டில் யூரோப்பியர்களால் உருவாக்கப்பட்டது.

✱ பிரான்ஸ் நாட்டில் ஓர் ஆண்டுக்கு 60 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் வந்து செல்வர்.

✱ உலகத்தில் உள்ள தாவரங்களில் அதிகமாக மற்றும் மிகப் பெரியதாக அதிக நாட்கள் வளரும் தாவரம் செக்குயா.

✱ உலகத்தில் மிகப் பெரியதாக வளரும் மலர் ரப்லிசியா.

- ர.மீனாட்சி, உ. எண் : 261, ஏழாம் வகுப்பு, அண்ணா ஜெம் மேல்நிலைப் பள்ளி, சென்னை



அடடே!

24 மணி நேரத்தில் நமது உடலில் நிகழும் விஷயங்கள்...

1. இதயம் 1,03,689 தடவை துடிக்கிறது.
2. இரத்தம் 2,68,800 கி.மீ. தூரம் செல்கிறது.
3. நகம் 0.000115 செ.மீ. வளர்கிறது.
4. உரோமம் 0.004285 செ.மீ. வளர்கிறது.
5. உடலில் இருந்து 1.43 பைண்ட் வியர்வை வெளியேறுகிறது.
6. உடல் 86.6°சி வெப்பத்தை வெளியேற்றுகிறது.
7. 23,043 தடவை சுவாசிக்கிறோம்.
8. 485 கன அடிக் காற்றை உள்ளிழுக்கிறோம்.
9. 70,09,000 மூளை அணுக்களுக்கு வேலை தருகிறோம்.

- ரா.பிரதீப்குமார், உ.எண் : 264, பதினோராம் வகுப்பு, காமராஜ் மே.நி. பள்ளி, நம்பியூர்

வித்தியாசங்களைக் கண்டுபிடி!





இரண்டு படங்களுக்கிடையே உள்ள ஐந்து வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்!

விடை 56-ம் பக்கம்

அது எது?

1. இங்குள்ள வட்டம் எட்டு பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொன்றிலும் ஓர் எண் உள்ளது. விடுபட்டுள்ள பகுதியில் பத்துக்குள் ஓர் எண் வரும். அது எது? சிந்தித்து கண்டுபிடியுங்கள்!



2. காலியாக உள்ள கட்டத்தில் விடுபட்ட எண்ணை கண்டுபிடித்து வரிசையை பூர்த்தி செய்யுங்கள் பார்க்கலாம்.

6	12	18	24	?	36	42

- எஸ்.திவ்யா, பத்தாம் வகுப்பு, கிரீன் பார்க் மெட்ரிக் பள்ளி, ஆத்தூர்

கட்டங்களில் கார்ட்டூன்கள்!

தினமும் நீங்கள் பார்த்து ரசிக்கும் கார்ட்டூன்களில் வரும் சில கதாபாத்திரங்களின் பெயர்கள் இங்கு ஒளிந்திருக்கின்றன. அவை இடவலம், வலஇடம், கீழிருந்துமேல், மேலிருந்து கீழாக இருக்கும். பெயர்களை கண்டு பிடியுங்கள்!

- என்.லோகேஷ்வர், ஏழாம் வகுப்பு, பெத்தி செமினேர் ஹையர் செகண்டரி ஸ்கூல், புதுச்சேரி



ஸ்	ப்	ளு	ட்	போ	டி	ன்	ளி	ஸ்
ஸ்	வு	ம	கி	க்	மி	டி	ன்	கூ
பு	ஜ்	ஸ்	பை	க்	டா	ன்	மி	பி
ரி	க்	ம்	பா	ம்	பு	டி	மி	ஜ
ர்	ட	ன்	ம்	ய்	டா	ஜி	ஜ்	பு
ஜெ	ட்	கோ	வ்	பா	டி	மோ	ஸ்	பு
ப்	ல்	டி	லி	ப்	பி	ந்	ஜெ	பா
ரா	னா	ஆ	ஆ	பா	டி	யா	கோ	ம்
டோ	டொ	லி	டா	ம்	பா	ஸ்	நோ	மி

நிழலும் நிஜமும்...



இங்கே சில பறவைகளும் அவற்றின் நிழல்களும் தரப்பட்டுள்ளன. எந்த நிழல் எதற்கு சொந்தமென கண்டுபிடியுங்கள்!



இங்குள்ள ஒன்பது படங்களும் ஒரே மாதிரி தெரிந்தாலும் சின்னச் சின்ன வித்தியாசங்களுடன் உள்ளன. அப்படியே ஒரே மாதிரி இருப்பவை இரண்டு மட்டுமே. அந்த ஜோடியைக் கண்டுபிடியுங்கள்!

ஜோடியைக் கண்டுபிடி!





தனித்திருப்பது எது?




இங்குள்ளவற்றில் தனித்திருக்கும் உயிரினம் எது?

விடைகள் பக்கம் : 56

வெறுங்கை...



"அப்பா, உங்ககூட நானும் வாக்கிங் வர்றேன்ப்பா!"

"வேணாம்டா கால் வலிக்கும்!"

"அப்ப, ஸ்கூட்டர்ல போகலாமே?"

- ச.ஆ.கேசவன், இனாம்மணியாச்சி



"நிலாவுல தண்ணி இருக்கா?"

"தெரியல. ஆனா, எண்ணெய் இருக்கு சார்!"

"எப்படிச் சொல்ற?"

"அங்கே ஒரு பாட்டி வடை சுடறாங்களே!"

- ச.ஆ.கேசவன்,
இனாம்மணியாச்சி

"நான் கல்யாண வீட்டுக்கு வெறுங்கையோட போனதேயில்லை."

"நான் கல்யாண வீட்டிலிருந்து வெறுங்காலோட வந்ததேயில்லை."

- சு.துர்காதேவி



"என் ஜாதகப்படி எனக்கு அறிவு ஜாஸ்தியாம்!"

"இப்பவாவது தெரியுதா? நான் ஏன் ஜாதகத்தை நம்பற

வெறுங்கால்!





''ரொம்பவும் நடுக்கத்தோட அப்படி எதை எழுதறே?''

''இமயமலையைப் பற்றிய கட்டுரையைத்தான்!''

- அனன்யா, திருச்சி

''உன் பையில் தேர்வு எழுதிய பேப்பர் இருக்கு.''

''எப்படிக் கண்டுபிடிச்சே?''

''பையிலிருந்து முட்டை வாசனை வருதே!''

- வே.சித்ரா, கும்மிடிப்பூண்டி





''உன் அப்பா டாக்டர்தானே?''

''எப்படி சார் கண்டுபிடிச்சீங்க?''

''நீ எழுதி வந்த வீட்டுப் பாடத்தைப் படிக்கவே முடியலையே.''

- வே.சித்ரா, கும்மிடிப்பூண்டி

தில்லைன்னு.''

- சு.துர்காதேவி, ஒன்பதாம் வகுப்பு, வேளாங்கண்ணி மாதா மேல்நிலைப் பள்ளி, சிவகாசி



தேவிகுளம் என்ற ஊரில் முத்து என்ற இளைஞன் வசித்தான். அவன் மிகுந்த ஏழை. சரியான வேலை எதுவும் கிடைக்காமல் வருமானத்துக்கு மிகவும் சிரமப்பட்டான்.

ஒரு நாள் சிதம்பரம் என்ற பெரிய மாந்தோப்புக்குச் சொந்தக்காரர், தனது மாந்தோப்பைப் பார்த்துக்கொள்ளும் வேலையை அவனுக்குக் கொடுத்தார்.

முத்துவும் தனது வேலையை மிகவும் பொறுப்பாகச் செய்யத் தொடங்கினான்.

நாட்கள் சென்றன.

ஒரு நாள் சிதம்பரம் நண்பர்கள் சிலருடன் மாந்தோப்புக்கு வந்தார்.

முத்து அவர்கள் அனைவரையும் வணங்கி வரவேற்றான்.

''முத்து நாங்கள் அனைவரும் சாப் பிடுவதற்கு நல்ல மாம்பழங்களைக் கொண்டு வா!'' என்றார் சிதம்பரம்.

முத்து உடனே ஓடிச் சென்று சில மாம்பழங்களைப் பறித்து வந்தான்.

சிதம்பரம் அந்த மாம்பழங்களை ஆளுக்கு ஒன்றாகக் கொடுத்துவிட்டு, தானும் ஒரு பழத்தை எடுத்துக் கடித்தார்.

கடித்தவர் ''அப்ப்ப்பா!'' என்று சொல்லி வாயைப் பிடித்துக்கொண் டார்.

''என்ன... பழம் இத்தனை புளிப் பாக இருக்கிறது?'' என்றார் சிதம்பரம்.

''ஆமாம்! எங்கள் பழங்களும் புளிப்பாகத்தான் உள்ளன!'' என்றனர் நண்பர்கள்.

சிதம்பரத்துக்கு முத்துவின் மேல் கோபம் வந்தது. ''முத்து! நீ என்ன வேலை செய்கிறாய்? நம் விருந்தினர்களை இப் படியா கவனிப்பது? பழங்கள் எல்லாம் ஒரே புளிப்பு! வாயில் வைக்க முடிய வில்லை. சுவையான இனிக்கும் மாம்பழங் கள் எந்த மரத்தில் இருக்கின்றன என்பது கூடத் தெரியாமல் நீ என்ன வேலை செய் கிறாய்?'' என்று கோபத்தோடு கேட்டார்.




- அ. அனீஸ் ஃபாத்திமா,
உறுப்பினர் எண்:34, பதினோராம் வகுப்பு,
சிசம் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, போடிநாயக்கனூர்.





காவல்காரன்

அதற்கு முத்து, ''ஐயா! என்னை மன்னிக்க வேண்டும். தாங்கள் எனக்குக் கொடுத்தது, இந்த மாந்தோப்பைப் பார்த்துக்கொள்ளும் காவல்காரன் வேலைதான். ஆகவே, மாம்பழங்களை நானே சாப்பிட்டால் அது தவறல்லவா? இங்கு எந்த மரத்துப் பழங்கள் புளிக்கும், எந்த மரத்துப் பழங்கள் இனிக்கும் என்று சாப்பிட்டுப் பார்த்துத் தெரிந்துகொள்ளும் உரிமையைத் தாங்கள் இதுவரை எனக்கு வழங்கவில்லையே!'' என்றான்.



அதைக் கேட்ட சிதம்பரம் அப்படியே நெகிழ்ந்துபோய் முத்துவைக் கட்டித் தழுவினார்.

''முத்து உன் குணம் தெரியாமல் கோபப்பட்டுவிட்டேன். என்னை மன்னித்துவிடு! ஒரு நேர்மையான மனிதன் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு நீ ஓர் எடுத்துக் காட்டு!'' என்று பாராட்டினார். ●

சேவை உள்ளம்!



HelpAge India | Fighting isolation, poverty, neglect

Certificate of Social Service

HelpAge India hereby records its special appreciation of the efforts made by

N. AMIRTHA SHREE


for creating awareness and assisting in raising funds for the care of the elderly, irrespective of race, religion, caste or creed.

MATHEW CHERIAN
Chief Executive

INDRANI RAJADURAI

மதுரை நாய்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளியில் பத்தாம் வகுப்பு படிப்பவர் **ந.அமிர்தஸ்ரீ.** நடனத்தில் பயிற்சி பெற்றவர். பல்வேறு போட்டிகளில் பங்கேற்று பரிசுகளும் பெற்றுள்ளார்.

சிலுக்குவார்பட்டி, சு.வி.உயர் நிலைப் பள்ளியில் எட்டாம் வகுப்பு படிப்பவர் **பா.கஜேந்திரகுமார்.** ஓவியம், ஓட்டம் என பல கலைகளில் மாவட்ட அளவில் பரிசுகள் வென்றுள்ளார். அத்துடன் கராத்தே போட்டியில் மாவட்ட அளவில் பச்சை பட்டை வென்றுள்ளார். இவரது சாதனை மேலும் தொடர்ந்து, புகழ்பெற கரவொலி எழுப்புவோம்!



அனைவருக்கும் கல்வி இயக்கம், தமிழ்நாடு

பாராட்டுச் சான்றிதழ்



ஔவை நிலையம் அறக்கட்டளை

சான்றிதழ்

M. அபிஷேக்

ஓவியப் போட்டியில்

இரண்டாமிடம்

திண்டல், யு.ஆர்.சி. பழனியம்மாள் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் ஐந்தாம் வகுப்பு படிப்பவர் **எம்.அபிஷேக்.** ஓவியம் வரைவதில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். இதற்காக பாரதி யுவகேந்திரா


ஓவிய





தவிர, சமூக சேவை பணிகளிலும் ஈடுபட்டு அதற்காக சான்றிதழ் பெற்றுள்ளார். வருங்காலத்தில் மேலும் பல சேவைகள் புரிந்து நாடு புகழ உயர்வதற்கு வாழ்த்துவோம்!

கராத்தே கரங்கள்!





விருது உட்பட பல்வேறு பரிசுகளையும் சான்றிதழ்களையும் பெற்றுள்ளார். இவரது ஓவியத் திறன் மேலும் வளர்ந்து வியப்பான வெற்றிகளைப் பெற வாழ்த்துவோம்!



விரல்கள்!

பெரிய நகரம் முதல் குக் கிராமம் வரையிலுள்ள இளம் சாதனையாளர்களை வெளிச்சமிட்டுக் காட்டும் பகுதியிது! விளையாட்டு, பேச்சு, ஓவியம் என எதுவாக இருந்தாலும் சரி, அவற்றில் மாவட்ட அளவிலோ, மாநில அளவிலோ கலந்துகொண்டு பரிசு பெற்றிருந்தால் அது குறித்த விவரங்கள், புகைப்படம், சான்றிதழின் நகல் ஆகியவற்றை அனுப்புங்கள். சிறந்தவை வெளியாகும். கோகுலம் சார்பாகவும் அவர்களுக்குப் பாராட்டுச் சான்றிதழ் மற்றும் பரிசு அளிக்கப்படும்.

மறக்காமல் பள்ளி, வீட்டு முகவரியைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். முக்கியமான நிபந்தனை அந்தச் சாதனை, கடந்த ஓராண்டுக்குள் நிகழ்த்தப்பட்டதாக இருக்க வேண்டும். பழையது வேண்டாம்!

அனுப்ப வேண்டிய முகவரி :

கோகுலம்,
சாதனைத்
தளிர்கள்,
47-NP,
ஜவாஹர்லால்
நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 032.





எட்டத்தில் இனிப்புப் பொட்டலம்!

I. 1. அடிக்காமலே பிள்ளை அலறித் துடிப்பான் - அவன் யார்?

2. அக்கா ஒரு அக்கா, எட்டு புடைவை கட்டுவாள் - அவள் யார்?

3. நீந்தத் தெரியும், ஆனால் குளிக்கத் தெரியாது - அவன் யார்?

4. ஒரு அம்மாவுக்கு பன்னிரண்டு கொண்டை - அது என்ன?

5. ஏற ஏற எரியுது; இறங்கிவிட்டால் குளிருது - அது என்ன?

- பி.கே.ஷ்யாம், ஆறாம் வகுப்பு, ஸ்ரீமாதா மெட்ரிகுலேஷன் பள்ளி, கும்பகோணம்

II. 1.எட்டத்தில் தொங்குது இனிப்புப் பொட்டலம் - அது என்ன?

2. தேடித் தேடிக் கிடைத்த உணவைக் கூடிக் கூடி உண்பான் - அவன் யார்?

3. அடித்தாலும் உடைத்தாலும் தாகம் தீர்ப்பான் - அவன் யார்?

4. காலைப் பொழுதை கரகர குரலில் அறிவிப்பான் - அவன் யார்?

5. மரத்தைத் தலையில் சுமப்பான்; பயத்தை மனத்தில் சுமப்பான் - அவன் யார்?

- ஏ.ராதா, எட்டாம் வகுப்பு, கஸ்தூரிபா காந்தி பாலிகா வித்யாலயா, ஏற்காடு



விடைகள் :

I. 1. சங்கு, 2. வெங்காயம், 3. கப்பல், 4. பூண்டு, 5. சூரியன்


II. 1. தேன்கூடு, 2. காகம், 3. தேங்காய், 4. சேவல், 5. மான்



கதை : ஆர். அருண்சிங் **படம் : பிள்ளை**


நள்ளிரவு - கந்தன் எலி பதுங்கிப் பதுங்கி வந்தது.
ஆஹா... வாசனை மூக்கைத் துளைக்குது. எல்லாத்தையும் ஒரு கை... இல்லை... ஒரு வாய் பார்த்துடுவோம்!
எனக்குத்தானே பிறந்தநாள். எதுக்கு எல்லோருக்கும் தரணும்? விடியறதுக்குள்ள மொத்தத்தையும் காலி பண்ணிடறேன்.
மறுநாள் -
இங்கே இருந்த இனிப்பை யார் எடுத்தது?
நாங்க எடுக்கலை!
தலைவரே! இங்கே காலி பாக்ஸ் இருக்கு. யாரோ திருடிச் சாப்பிட்டு இருக்காங்க.
யார் வேலை இது?


அப்போது-
ஆ! அம்மா... வயித்தை வலிக்குதே...
இது கந்தனின் குரல்!
கந்தனின் இடத்தில் -
கந்தா! உனக்கு என்ன ஆச்சு?
வயித்து வலிக்கு மருந்து கொண்டு வாங்க.
மருந்து சாப்பிட்டதும் வலி குறைந்தது.
என்னை மன்னிச்சுடுங்க. எல்லா இனிப்பையும் நானே சாப்பிட்டதால வந்த வினை.
அடப்பாவி! உன் வேலைதானா?
சரி போகட்டும்! இனிமே இப்படிப் பண்ணாதே. எதையும் பகிர்ந்து உண்போம். சந்தோஷமா இருப்போம்.



சிவப்பு, ஆரஞ்சு, மஞ்சள், பச்சை போன்ற நிறங்களிலும், நீளம், உருண்டை என வடிவங்களில் வேறுபட்டும் 10,000 வகைகளில் தக்காளிகள் காய்க்கின்றன.

10,000 தக்காளிகள்!

கோழிக்குஞ்சுகள் மணிக்கு 14 கி.மீ. வேகத்தில் ஓடக் கூடியவை.



- அஜீத் மனோஜ்,
அன்னை மெட்ரிகுலேஷன் பள்ளி,
வேலூர்.



இன்றைய உலகில் வெடிக்கும் நிலையில் உள்ள எரிமலைகள் சுமார் 1500!





உப்பு நீரில் வசிக்கும் மீன்களால் பின் பக்கமாக நீந்த முடியாது. ஆற்று மீன்கள் இருபக்கமும் நீந்தும்.



நாம் சுவாசிக்கும் மூச்சுக்காற்றில் 25 சதவிகிதம் நம் கண்களுக்குத்தான் போகிறது.

முதல் முதலாக மனிதனால் பிடித்து வளர்க்கப்பட்ட மீன் ‘கோல்டு ஃபிஷ்’



தாய் மண்!



செ. கார்த்திகா,
டி.ஏ.வி. பெல் பள்ளி,
இராணிப்பேட்டை.

தாயாய் நாட்டை வணங்கிடுவோம்
சேயாய் அதனைக் காத்திடுவோம்
சண்டை யின்றி வாழ்ந்திடுவோம்
சேர்ந்தே வளம் சேர்த்திடுவோம்!

சதிகள் செய்யும் வீணர்களை
துடியாய் நாமே விரட்டிடுவோம்
விதிகள் பலவே உருவாக்கி
வீரமாய் மண்ணைப் போற்றிடுவோம்!

அறிவை அளிப்பது தாய்நாடு
உயர்வைத் தருவது தாய்நாடு
எத்தனை உயரம் சென்றாலும்
நித்தமும் போற்றி வணங்கிடு!

கண்ணாமூச்சி!



வெ. தமிழழகன்

கண்கள் இரண்டை கட்டுங்கள்
கண்ணாமூச்சி ஆடுங்கள்!
கண்ணைத் திறந்து பாருங்கள்
கண்டுபிடித்துச் சேருங்கள்!

மென்மை கொஞ்சும் விளையாட்டை
மேலும் ஆடி தலையாட்டி
புன்னகை யோடு ஆடுங்கள்
புதுப்புது நன்மை தேடுங்கள்!

உன்னை என்னை உறவாக்கி
ஒற்றுமை தன்னை உருவாக்கி
பண்ணுவ தெல்லாம் விளையாட்டு
பரவச மாக தலையாட்டு!



கைகளுக்குள் அடக்கியே
சாட்டை அதில் சுற்றுவர்
தரையில் ஓங்கி விட்டதும்
சுற்றி நின்று மகிழுவர்!

கூர்மையான ஆணிதான்
கூம்பு முனையில் இருந்திடும்
நேர்மையான மனிதனாய்
நிமிர்ந்து நடனம் புரிந்திடும்!

பூமிபோல வாழ்வுமே
பம்பரம்போல் சுழலுது
நாமும் சுற்றி ஆடியே
நாளும் வெற்றி கொள்வோமே!

பம்பரம்!

சின்னச் சின்னக் கட்டையை
குடைந்து செய்யும் பம்பரம்
வண்ண வண்ண உடையிலே
சிரித்து சுழலும் பம்பரம்!

தலைபெருத்து ஒரு பக்கம்
கூம்பு போல மறுபக்கம்
ஒற்றைக் காலில் சுழன்றுமே
உறவு சொல்லி சிரிக்குமே!



ஆரிசன்

விடைகள் பக்கம்

கட்டங்களில் கார்ட்டூன்கள் :

ல்	ப்	ளூ	ட்	டோ	டி	ன்	னி	ல்
ஸ்	வு	ம	கி	க்	மி	டி	ன்	கூ
பு	ஜ்	ஸ்	பை	க்	டா	ன்	மி	பி
சி	க்	ம்	பா	ம்	பு	டி	வி	ரே
ச்	ட	ன்	ம்	ப்	டா	ஜீ	ஜ	பு
ஜெ	ட்	கோ	வ்	பா	டி	மோ	ஸ்	பு
ப்	ல்	டி	வி	ப்	மி	ந்	ஜெ	பா
ரா	ளா	ஆ	ஆ	பா	டி	வ	கோ	ம்
டோ	டெ	வி	டா	ம்	பா	ஸ்	ஜே	வி

நிழலும் நிஜமும்...

1 - ஆ, 2 - இ, 3 - ஈ, 4 - ஐ, 5 - அ, 6 - ஏ, 7 - எ, 8 - ஊ, 9 - உ

இதோ விடை!

வித்தியாசங்கள்

1. கதவின் கைப்பிடி
2. டோராவின் காலணி நிறம்
3. புஜ்ஜியின் வால்
4. பையின் கண்கள்
5. மேகம்

ஜோடிகள்

3 - 8

தனித்திருப்பது...

மீன் - நீரில் வாழும் உயிரினம்

அன்பு நண்பர்களே...


'கோகுலம் எக்ஸ்பிரஸ்' பகுதிக்கு கதை, கவிதை, அறிவியல் துணுக்குகள், புதிர்கள், சுற்றுலா அனுபவம், பள்ளி மற்றும் வீட்டில் நடந்த பல்சுவை அனுபவங்களை எழுதியனுப்புங்கள். படைப்புகளுடன் உங்கள் பெயர், வகுப்பு, பள்ளி, வீட்டு முகவரியைத் தெளிவாக குறிப்பிட வேண்டும். அனுப்ப வேண்டிய முகவரி :

ஆசிரியர் - கோகுலம்
(எக்ஸ்பிரஸ் பகுதி)
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 032

படைப்புகளை அனுப்புங்கள்; பங்கேற்று அசத்துங்கள்!

– டாக்டர் கு. கணேசன்

எக்ஸலண்ட் எயின்தோவென்!



"ஹலோ கோகுலம் குட்டீஸ்! நலம் தானே? போன மாதம் கார்பாலிக் அமிலத்துக்கு வேறு பெயர் என்னன்னு கேட்டிருந்தேன். பதில் தெரிஞ்சதா? அதன் பெயர் 'பீனால்'. இந்த மாதம் இதயத் துடிப்பை கிராஃப் மாதிரி வரைந்து காண்பிக்கும் இ.சி.ஜி. மெசினைக் கண்டுபிடித்த 'வில்லெம் எயின்தோவென்' (Willem Einthoven) பற்றித் தெரிஞ்சுக்குவோம்.

இவர், தற்போதைய இந்தோனேஷியாவில் உள்ள ஜாவா தீவில் 'செமாரெங்' எனும் ஊரில் 1860, மே 21ம் நாள் பிறந்தார். இவரது தந்தை 'ஜேக்கப் எயின் தோவென்' பிரபல மருத்துவர். வில்லெம் எயின்தோவெனின் ஆறாவது வயதில் தந்தை இறந்துவிட, தமது குழந்தைகளுடன் ஹாலந்துக்கு இடம்பெயர்ந்தார் இவரது தாயார். அங்கு வில்லெம் 'உத்ரெச்' பல்கலைக்கழகத்தில் மருத்துவம் படித்து 1885ல் டாக்டர் ஆனார். அதே ஆண்டில் 'லெய்டன்' மருத்துவப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணியில் சேர்ந்தார்.

இவர் ஆரம்பத்தில் மனிதர்களிடம் கண் பார்வை மற்றும் சுவாச நிகழ்வுகள் நடைபெறுவதற்கு எங்கிருந்து சக்தி கிடைக்கிறது என்பது போன்ற ஆராய்ச்சிகளில் இறங்கினார். பின்னர், 'மனித இதயத்தில் மின் சக்தி உற்பத்தி ஆவதால்தான் இதயம் துடிக்கிறது' என்பதை ஏற்கெனவே தெரிந்து வைத்திருந்த வில்லெம், இந்த மின்சக்தி இதயத்தில் எப்படி உருவாகிறது என்ற ஆராய்ச்சியில் ஈடுபட்டார். இதயத்தில் உருவாகின்ற மின் சக்தியை இதயத் துடிப்பின் வாயிலாகவே உடலுக்கு வெளியே கொண்டுவந்து, அதை ஒரு இயந்திரத்தில் பதிவு செய்துகொண்டால் இதய நோய்க்கான காரணத்தைக் கண்டுபிடிப்பது எளிது என நினைத்தார்.

அந்தக் காலத்தில் இதயத் துடிப்புக்



கான மின்னாற்றலைப் பதிவு செய்ய மின் தகடுகளை நேரடியாக இதயத்தில் சொருக வேண்டும். ஏற்கெனவே நோயால் அவதிப்பட்டுக் கொண்டிருப்பவர்கள் இந்த முயற்சிக்கு ஒப்புக் கொள்ளவில்லை.

அப்போது 1887ம் ஆண்டு வாக்கில் இங்கிலாந்து விஞ்ஞானி 'வேலர்' என்பவர் 'கேப்பல்லரி எலெக்ட்ரோமீட்டர்' எனும் கருவி மூலம் இதயத் துடிப்பினைப் பதிவு செய்யும் முறையைக் கண்டறிந்து விட்டதாக அறிவித்தார். வில்லெம் அவரை நேரில் சந்தித்தார்.

1889ல் 'பேலீ' நகரில் நடந்த சர்வதேச விஞ்ஞானிகள் மாநாட்டில் வேலர், ஜிம்மி எனும் தமது நாயின் இதயத் துடிப்பைப் பதிவுசெய்து காண்பித்ததை நேரில் கண்டார். ஆனால், அந்தக் கருவியில் வில்லெம்முக்கு திருப்தி ஏற்படவில்லை. அக்கருவியில் இதயத் துடிப்பு துல்லியமாகப் பதிவாகவில்லை என்பது மட்டுமல்லாமல், துடிப்பின் எண்ணிக்கையைத் தெரிந்துகொள்ள பல கணக்குகள் போடவேண்டி இருந்தது. ஆகவே இதைவிட துல்லியமாகவும் எளிதாகவும் துடிப்பைப் பதிவு செய்யும் கருவி ஒன்றைக் கண்டு பிடிக்க ஆசைப்பட்டார், வில்லெம்.

அவரது எண்ணத்துக்குக் கை கொடுத்தது, 'கால்வனா மீட்டர்' எனும் கருவி. ஒரு மின்சுற்றில் மின்னோட்டம் உள்ளதா, இல்லையா என்று காண்பிக்கின்ற கருவி இது. இரு காந்தப் புலன்களுக்கிடையில் மின்னோட்டம் செல்லும்போது அவற்றுக்கு இடையில் உள்ள மின்கடத்தி, நகரும் அல்லது ஆடும் என்கிற தத்துவத்தில் உருவாக்கப்பட்டது. மேலும் மின்னோட்டமானது கருவியை விட்டு சற்று தள்ளி இருந்தாலகூட, அதை அப்படியே கிரகித்துத் தன்னிடம் பதிவு செய்துகொள்ளும்

மருத்துவ மேதைகள் :



'உலக மருத்துவ மரபியலின் தந்தை' என்று போற்றப்படுபவர் 'டாக்டர் விக்டர் ஏ.மேக்குசிக்' (Dr.Victor A. Mckusick). இவர் 1921, அக்டோபர் 21-ம் நாள் அமெரிக்காவில் 'மெயினி' எனும் ஊரில் பிறந்தார். 'ஜான்ஸ் ஹாப்கின்ஸ்' பல்கலைக்கழகத்தில் எம்.டி. பட்டம் பெற்று, அங்கேயே இதய மருத்துவரானார். இவர் படித்தது இதயத்தைப் பற்றி என்றாலும், இவரது ஆர்வம் அனைத்தும் மரபியலில் இருந்தது. இதனால் தாம் பணிபுரிந்த மருத்துவப் பல்கலைக்கழகத்தில் மருத்துவ மரபியல் துறையை முதன் முதலில் துவக்கினார். ஒரு

தன்மை, அக்கருவிக்கு உள்ளதை அறிந்து மகிழ்ச்சியில் துள்ளினார் வில்லெம். அதாவது கால்வனாமீட்டரை நெஞ்சின்மீது வைத்தாலும் நெஞ்சுக்குள் சற்று தள்ளி இருக்கும் இதயத்தின் துடிப்பை உணர்ந்து கொள்ளக் கூடியதாக அக்கருவி இருந்தது.

உடனே தமது தேவைக்கேற்ப அக் கருவியில் சில மாறுதல்களைச் செய்தார், வில்லெம். ஆரம்பத்தில் இதனை 'வயர் கால்வனாமீட்டர்' என்று அழைத்தார். அதன்படி இரு காந்தப் புலன்களுக்கு இடையில் ஒரு மெல்லிய மின்கடத்தி தொங்கிக்கொண்டிருக்கும். இதயத்தி லிருந்து கிளம்பும் மின்னோட்டத்தை மின்கம்பிகள் கிரகித்து இந்தக் காந்தப் புலத்துக்கு அனுப்பும். அப்போது அக் கருவியில் உள்ள மின்கடத்தியானது மின்னோட்டத்துக்கு ஏற்ப மேலும் கீழும் நகரும். அப்போது இந்தக் கடத்தியின் மீது பட்டுக்கொண்டிருக்கும் ஒளியானது அக் கருவியின் எதிர்ப்புறத்தில் வைக்கப்பட் டிருக்கும் ஒரு புகைப்படச் சுருளில், மின் கடத்தி நகரும் தன்மையை நிழல்போல் பதிவு செய்யும்.

இவ்வாறு இதயத்தைத் தொடாமலேயே இதயத் துடிப்பினைப் பதிவு செய்யும் எளிய முறையை 1901ல் கண்டுபிடித்தார். இதுதான் 'எலெக்ட்ரோ கார்டியோகிராம்' (Electro Cardio Gram) எனப்படும் ஈசிஜி இயந்திரம்.

தற்போதுள்ள ஈசிஜி இயந்திரங்கள் பல நவீன மாற்றங்களைப் பெற்றிருந்தாலும்,



வில்லெம் கண்டுபிடித்த அதே தத்துவ அடிப்படையில்தான் இயங்குகின்றன. ஆகவே இந்த அற்புதக் கண்டுபிடிப்புக்காக 1924ல் அவருக்கு நோபல் பரிசு கிடைத்தது.

விக்டர் ஏ. மேக்குசிக்

குடும்பத்தில் வழக்கத்தைவிட மிகவும் உயரமாக உள்ளவருக்கு 'மார்ஃபான்' எனும் நோய் ஏற்படுகிறது எனவும் அந்த நபருக்கு இதயத்தில் வால்வுக் கோளாறு, கண்ணில் லென்சுக் கோளாறு, முதுகெலும்புக் கோளாறு போன்றவை காணப்படுகின்றன எனவும், அதற்கு ஒரு மரபணுதான் காரணம் என்பதையும் கண்டுபிடித்தார். இந்த மரபணுவை நீக்கினால் இந்த நோய் வர வாய்ப் பில்லை எனவும் தெரிவித்தார். இதனைத் தொடர்ந்து, பரம்பரையாகவே குட்டையாகப் பிறக்கின்றவர்களுக்கும் நிறக்குருடு (Colour Blindness) உள்ளவர்களுக்கும் காரணமாகின்ற மரபணுவையும் இவர்தான் கண்டுபிடித்தார். அதன் பின்னர் 1800 மரபணுக் களைக் குறிப்பிட்டு, அவற்றால் ஏற்படுகின்ற பரம்பரை நோய்களைத் தொகுத்து, 'மெண்டலியன் இன்ஹெரிட்டென்ஸ் இன் மேன்' எனும் நூலை எழுதி 1966ல் வெளியிட்டார்.

ஹலோ குழந்தைகளே! போன மாதம் நகைச்சுவை நாயகன் மிஸ்டர் பீனை ரசிச்சிருப்பீங்க. இந்த மாதம் ஒரு ஆக்‌ஷன் ஹீரோவையும் அவரோட டீமையும் 'மீட்' பண்ணுவோமா?

உலகின் அனைத்துக் கண்டங்களையும் கலக்கிய ஹீரோ ஜாக்கிசான், குழந்தைகளுக்காகத் தயாரிக்கப்படும் கார்ட்டூன் தொடரிலும் இடம் பிடித்துவிட்டார். இயல்பான தோற்றத்துடனும், கார்ட்டூனாகவும் மாறி மாறிக் கலக்கும் ஜாக்கிசானின் சாகசங்கள் குழந்தைகளின் டிஷ்ஷூம் டிஷ்ஷூம் கனவுகள்...

ஐந்தாண்டு தொடர் ஓட்டம்!

ஜாக்கிசான் சாகசங்கள் முதலில் ஆங்கிலத்தில் 'ஜாக்கிசான் அட்வெஞ்சர்ஸ்' என்னும் பெயரில் செப்டம்பர் 9, 2000 முதல் 2005 ஜூலை 7 வரை தொடர்ந்து ஒளிபரப்பானது. இந்தத் தொடரின் தாய்வீடு அமெரிக்கா. மொத்தம் ஐந்து பருவங்களாக, 95 பிரிவுகளாக ஒளிபரப்பானது. ஜாக்கிசானின் சாகசங்கள் தொடரை உருவாக்கியவர் 'ஜான் ரோஜர்ஸ்' என்பவர். இதில் இடம்பெற்ற கதாபாத்திரங்களை வடிவமைத்தவர் 'ஜெப் மெட்சுடா'. பேட்மேன் கார்ட்டூன் தொடர் வடி



சாகச மன்னன் ஜாக்கிசான்!





வமைப்பாளரும் இவரே. ஜாக்கிசானின் உண்மையான சாகசங்களை அடிப்படையாகக்கொண்டு உருவாக்கப்பட்ட இந்தத் தொடர், கிட்ஸ் சேனலிலும் பின்னர் கார்ட்டூன் நெட்வொர்க்கிலும் அதைத் தொடர்ந்து டூன் டிஸ்னியிலும் ஒளிபரப்பானது. தற்பொழுது தமிழில் வெளிவருகிறது.

ஜாக்கிசானின் அதிரடிகள் அற்புதமாக நிகழ, நல்ல திரைக்களம் அமைத்துக் கொடுத்துள்ளனர். இதில் ஜாக்கிசான் புதை பொருள் ஆய்வாளராகவும், தற்காப்புக் கலைகளில் வல்லுநராகவும், போர்க்குணமுடைய உளவாளியாகவும் வலம் வருகிறார். தீய சக்திகளிடமிருந்து இந்த உலகைக் காக்கும் உன்னத பணியைச் செய்பவராக, பெரும்பாலும் பிரிவு 13இன் உளவாளியாக, கருப்புக் கை (த டார்க் ஹேண்ட்) எனப்படும் தீய சக்தி கொண்ட கும்பலின் சூழ்ச்சிகளை உடைப்பவராகவும் சாதனை படைக்கிறார். முதல் பருவத் தொடர்களில் 12 மந்திர சக்தி வாய்ந்த பொருட்களைத் தேடிக் கண்டுபிடிக்கிறார். இதற்காக அவர் உலகின் பல்வேறு நாடுகளுக்குப் பயணிக்கிறார்.

ஜூலி சான்

ஜாக்கிசானுக்கு இணையாக இடம்பெற்றிருக்கும் கதாபாத்திரம் குட்டிப் புயல், சுட்டிப் புயல் 'ஜேட் சான்'. தமிழில் ஜூலி என்ற அழகான பெயருடன் வலம் வருபவள். குழந்தைகளைப் பெரிதும் கவர்ந்தவள் ஜூலிதான். ஜாக்கிசானின் அண்ணன் மகள். சுறுசுறுப்பும், புத்தி சாலித்தனமும் இவளின் ப்ளஸ்! ''நீ சிறிய பெண், அமைதியாக இரு'' என வயதான மாமா சொல்வதை நிராகரித்து பிரச்னையில் மாட்டிக் கொள்வாள். பின்னர், தன்



முனைவர் ஆகரா



புத்திக்கூர்மையாலும், ஜாக்கிசானின் உதவி யுடனும் வெளியே தப்பித்து வருவாள்.

சான் மாமா

வயதான கதாபாத்திரம், ஒல்லியான தோற்றம், பொக்கைவாய், நீள மூக்கின் நடுவில் நிற்கும் கண்ணாடி, உச்சியில் சிலுப்பிக்கொண் டிருக்கும் முடிகள், சிடுசிடு பேச்சென நினைவில் நிற்பவர். சட்டை, அதற்கு மேல் ஓவர் கோர்ட் அணிந்திருப்பார். ஜூலி யுடன் வாக்குவாதத்தில் ஈடுபடுவார். பீமனால் 'சென்சாய்' அதாவது ஆசி ரியர் என அழைக்கப்படுபவர். மந்திர முயற்சிக்கு இவர் மீன்களைப் பயன்படுத்துவார். இவருக்குப் பிடித்தது தேநீர். நிறைய விரும்பிக் குடிப்பார். இருந்தாலும் சூடாக இருக்கிறது. சூடாக இல்லை என்று குறை சொல்லிக்கொண்டே இருப்பார். யாராவது தவறு செய்தால் தலையில் நறுக்கென கொட்டுவார்.



ஒவ்வொரு மந்திரக் கல்லுக்கும் ஒரு சக்தி உண்டு. பாம்பு மந்திரக்கல் உருமாறி மறைந்து போக வைக்கும்...

பீமன்

ஜாக்கி, ஜூலியுடன் இணைந்து குழந்தைகளைக் குதூகலிக்க வைக்கும் 'டோரு' என அழைக்கப்படும் மாமிச மலையே பீமன். முதலில் இவன் தீய சக்தியான வால்மன்ட்டின் வேலைக்கார னாக இருந்தான். பின்னர் மாமாவின் உதவியாளனாக மாறி ஜாக்கி அணியில் இணைந்தவன். பெரிய உருவமாக இருந்தாலும் பல சமயங்களில் குழந்தை மனம் படைத்தவனாக மாறிவிடுவான். சுமோ சண்டைக்காரர்கள் போல இருப் பான். இவனுக்குப் பிடித்தது கிரேப் சோடாதான். பூனைகளுடன் விளை யாடுவான். குரங்கு மந்திரக் கல் லைப் பயன்படுத்தி எதிரி களைப் பூனைக் குட்டிகளாக மாற்றுவான். இந்தக் காட்சிகள் குழந்தைகள் ரசிக் கும்படியாக இருக்கும்.

ஜெ-அணி

பிரிவு 13 மற்றும் ஜெ அணி ஜாக்கிசானின் கூட்டாளிகள். இதில் கேப்டன் 'அகஸ்டஸ் ப்ளாக்' தலைமைப் பொறுப்பேற் றுள்ளார். இவர் ஜாக்கியின்



குணப்படுத்தும். முதலாம் பருவத் தொடரில் உலகெங்கும் சிதறி மறைந்து கிடந்த இந்த மந்திரக் கற்களை ஜாக்கிசான் கண்டு பிடித்து எடுத்து வருவார். இதற்கான பணியை பிரிவு 13 என்னும் உளவு நிறுவனம் ஜாக்கிக்கு வழங்கியது.

நீண்டகால நண்பர். கேப்டன், ஜேம்ஸ் பாண்டின் ரசிகர் போல 007 என்ற எண்ணை ரகசிய எண்ணாகப் பயன்படுத்துவார். முதலில் மேஜிக் மற்றும் மாய சக்திகளை நம்பாதவராக இருந்தார். பின்னர் ஷென்டுவைக் கண்ட பின் தன் முடிவை மாற்றிக்கொண்டார்.

இவரோடு அடிக்கடி 'சாரி' என்ற வார்த்தையை உச்சரிக்கும் 'எல் டோரா' என்னும் தலைக்கவசம் அணிந்தவனும், ஜாக்கியை எலி மனிதன் என அழைக்கும் பாகோவும், வைபரும் இடம்பெற்றுள்ளனர். பிரிவு 13 மற்றும் ஜெ அணி, பரபரப்பாகவும், சுறுசுறுப்பாகவும், அதிரடியாகவும் செயல் படக்கூடிய உளவு நிறுவனமாகும்.

மந்திரக் கற்கள்!

'தலிஸ்மன்கள்' என அழைக்கப்படும் மந்திரக் கற்கள் 12 விலங்குகளைக் குறிப்பதாகும். இது சீனர்களின் நம்பிக்கையின் அடிப்படையில் அமைந்தது. இதில் எலி, எருது, புலி, முயல், டிராகன், பாம்பு, குதிரை, ஆடு, குரங்கு, சேவல், நாய், பன்றி இடம்பெற்றுள்ளன. ஒவ்வொரு மந்திரக் கல்லுக்கும் ஒரு சக்தி உண்டு. பாம்பு மந்திரக் கல் உருமாறி மறைந்து போக வைக்கும். குதிரை மந்திரக் கல் நோயைக்

ஜாக்கி வழங்கும் நல்ல கருத்துகள்!

ஜாக்கிசானின் சாகசங்கள் நிகழ்ச்சியில் நன்மைக்கும் தீமைக்கும் இடையே நிகழும் யுத்தத்தில் இறுதியில் நன்மைதான் ஜெயிக்கும் என்னும் கருத்து வலியுறுத்தப்படுகிறது. இதில் ஜாக்கியின் பங்களிப்பு அபாரமானது. சீன நடிகர், சண்டைக் காட்சி அமைப்பாளர், திரைப்பட இயக்குநர், தயாரிப்பாளர், சண்டைக் காட்சியில் நடிப்பவர், நகைச்சுவை நடிகர், எழுத்தாளர், பாடகர் என்று பல்வேறு துறைகளில் முத்திரை பதித்த ஜாக்கி, நிகழ்ச்சியின் இறுதியில் நல்ல அறிவுரைகளையும் கருத்துகளையும் வழங்குவார். அவை குழந்தைகளின் வாழ்க்கைக்குப் பயனுள்ளவையாக அமைகின்றன!



புதிய வாசகர்களே...

நான் கோகுலத்தின் புதிய நண்பன். 'கோகுலம் சிறுவர் சங்கம்' உறுப்பினராவதற்குரிய நிபந்தனைகள் என்ன என்பதைத் தெரியப்படுத்தும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

- மு.அருண்குமார், பதினொராம் வகுப்பு,
ஆர்.வி. அரசு ஆண்கள் மே.நி.பள்ளி, ஓசூர்

அருண்குமாரைப் போல் நிறைய புது வாசகர்கள் தெரிந்துகொள்ள ஜூன் 2007ல் வெளியிட்ட அறிவிப்பு இதோ மீண்டும்... படியுங்கள், உங்கள் நண்பர்களையும் உறுப்பினராக்குங்கள்!

* தமிழ் எழுத, படிக்கத் தெரிந்த குழந்தைகள் உலகில் எங்கிருந்தாலும் அவர்கள் கோகுலம் சிறுவர் சங்கத்தில் சேரலாம். ஒரே நிபந்தனை, நீங்கள் பள்ளியில் படிப்பவராக (+2 வரை) இருக்க வேண்டும்.

* கூப்பனைப் பூர்த்தி செய்து புகைப்படம் ஒட்டி அனுப்ப வேண்டும். கூப்பனை நகல் எடுக்கக் கூடாது. அசல் கூப்பன் மட்டுமே அனுப்ப வேண்டும். ஒருமுறை அனுப்பினாலே போதும். கண்டிப்பாக வெளியிடுவோம். எனவே, ஒருவரே மீண்டும் அனுப்பாதீர்கள்.

* உங்கள் புகைப்படம் வெளியானதும், நாங்கள் உங்களுக்கு 'கோகு' உருவமுள்ள உறுப்பினர் அட்டையை அனுப்புவோம். அதில் உங்களைப் பற்றிய விவரங்களுடன் உங்களுக்கான உறுப்பினர் எண்ணும் கொடுக்கப்பட்டிருக்கும்.

பிறகு நீங்கள் கோகுலத்துக்கு படைப்புகளை அனுப்புகையில் உறுப்பினர் எண்ணையும் குறிப்பிடுங்கள்.

இம்மாத கூப்பன் **67**ஆம் பக்கத்தில் உள்ளது.





ப்ரெண்டன் புயலும் சீனச் சூறாவளியும்!

ஹாரி பாட்டர், ஸ்பைடர்மேன் படங்களைப் போல், 'மம்மி' திரைப்பட வரிசையும் ஒவ்வொரு பாகமும் முந்தைய பாகத்தை மிஞ்சும் வகையில் பிரமாண்டமாக தயாரிக்கப்படுகிறது. அந்த வகையில் ஆகஸ்ட் மாதம் திரைக்கு வந்துள்ளது மம்மி 3. (The Mummy-Tomb of the Dragon Emperor)

முந்தைய இரு படங்களின் நாயகன் 'ப்ரெண்டன் ஃப்ராஷர்' புயல்தான் இந்தப் படத்திலும் நாயகன். மம்மியாக வருபவர் சீனச் சூறாவளி 'ஜெட் லீ'. இரண்டாம் பாகத்தில் ப்ரெண்டனின் மகனாக வரும் குட்டிப் பையன் அலெக்ஸ், இதில் துடிப்பான இளைஞனாக சாகஸம் புரிகிறார்.

பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு சீனாவிலிருந்த ஒரு மன்னனுக்கு, உலகம் முழுவதையும் வென்று, தானே ஒரே அரசனாக இருக்க ஆசை எழுகிறது. எதிர்க்கும் மன்னர்களைக் கொன்று, நாடுகளைக் கைப்பற்றுகிறான். வயதாக வயதாக, மற்ற நாடுகளை வெல்ல முடியாமலே இறந்து விடுவோமோ என்ற பயம் வருகிறது.



• பிரவீன்



அதனால் என்றும் இறக்காத மந்திரத்தைக் கற்க முடிவு செய்கிறான். அந்த மந்திரம் தெரிந்த பெண் மந்திரவாதியை வரவழைக்கும் மன்னன், அதைக் கற்றதும் அவளையே கொல்ல முயற்சிக்கிறான். மன்னனையும் அவனது படைகளையும் அவள் சபிக்க, எல்லோரும் மண்ணுக்குள் மம்மிகளாக உறைந்து விடுகிறார்கள்.

பல நூறு ஆண்டுகள் கழித்து, அந்த இடத்தில் ஆராய்ச்சி செய்ய வருகிறான் ப்ரெண்டனின் மகன். அதேசமயம் மன்னனை உயிர்ப்பிக்க ஒரு கும்பலும் வருகிறது. அவர்களின் சதியால் மம்மி உயிர் பெறுகிறது. நாயகன் டீம் அதை எப்படி அழிக்கிறது என்பதுதான் விறுவிறுப்பான மீதிக்கதை.

காட்சிக்கு காட்சி விறுவிறுப்பு! மம்மி உயிர்பெற்று, புத்தாண்டு கொண்டாட்டம் நடக்கும் சீனச் சாலையில் குதிரையில் செல்ல, அதை நாயகன் துரத்தும் காட்சி பிரமிப்பு! மூன்று தலை டிராகன், பனிமலை மனிதக் குரங்குகள், ஆயிரக்கணக்கான மம்மியின் படை வீரர்கள், அவர்களை எதிர்க்கும் பெண் மந்திரவாதியின் படைகள்... இப்படி ஆரம்பம் முதல் இறுதிவரை திரையை விட்டு கண்களை அகற்ற முடியாதவாறு பிரமாண்ட காட்சிகள் நிறைந்துள்ளன.





கோகுலம் சிறுவர் சங்கம் - கூப்பன்

என் பெயர் : ....

வயது : ....

பெற்றோர் பெயர் : ....

வகுப்பு, பள்ளி : ....

: ....

வீட்டு முகவரி : ....

....

....

புகைப்படம்

நான் கோகுலம் சிறுவர் சங்கத்தின் உறுப்பினராகச் சேர விரும்புகிறேன். உங்கள் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்கிறேன்.

(கையொப்பம்)

இதுவரை கோகுலம் சிறுவர் சங்கத்துக்கு கூப்பன் அனுப்பாதவர்கள் உடனே அனுப்புங்கள். உங்கள் நண்பர்களுக்கும் விஷயத்தைச் சொல்லி, அவர்களையும் உறுப்பினராக்குங்கள்!

படத்தில் நகைச்சுவைக்கும் பஞ்ச மில்லை. முந்தைய இரு படங்களில் நாயகியின் அண்ணனாக வந்து சிரிக்க வைத்தவர் இதிலும் கலக்குகிறார். அதோடு ப்ரெண்டனும் அவரது மகனும்கூட தங் களுக்குள் முறைத்துக்கொண்டு நம்மைச் சிரிக்க வைக்கிறார்கள்.

இதுவரை நாயகனாகவே வந்து நம்மை மகிழ்வித்த ஜெட் லீ, இதில் வில்லனாக அவதாரம் எடுத்திருக்கிறார். அதனால் இறுதியில் அவர் இறக்கும்போது நமக்கு வருத்தமாக இருக்கிறது. ஜெட் லீ ரசிகர் களுக்கு இது ஏமாற்றமாகவும் இருக்கும். நாயகனுடன் இணைந்து மம்மியை



எதிர்க்கும் இன்னொரு பாத்திரமாக அவர் வந்திருக்கலாம். 'மம்மி 3' மற்ற இரு பாகங் களையும் மிஞ்சிய அற்புதமான விருந்து!


வாண்டுதாசன்
தொடர்கதை
8

மாணிக்கம் தலையைத் திருப்பி சுற்றிலும் நோட்டமிட்டான். அந்த இடமே விசித்திரமாக, கூம்பு வடிவமைப்பில் இருந்தது. அந்தரத்தில் சில ஊஞ்சல்கள் தொங்கின. அவற்றில் ஒன்றில் மாணிக்கம் அமர்ந்திருந்தான். இன்னொரு ஊஞ்சலில் அரசர் பொன்முகிலன் மயங்கிய நிலையில் தலை கவிழ்ந்து இருந்தார். கீழே விழுந்துவிடாமல் இருக்க ஊஞ்சலின் சங்கிலியோடு அவரது கைகள் கட்டப்பட்டிருந்தன. சுவர்களில் முதலை அளவுக்கு சில பல்லிகள் உலாவிக் கொண்டிருந்தன. மூலைகளில் சிலந்தி வலைகள். அவை கயிறு போலிருந்தன. சிலந்திகளோ, ஒவ்வொன்றும் ஒவ்வொரு நிறத்தில் உள்ளங்கை அளவில் இருந்தன.

மாணிக்கம் ஊஞ்சலின் சங்கிலியைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு கீழே குனிந்து பார்த்தான். தரையே தெரியவில்லை. முடிவில்லாத பாதாளம் போல் இருட்டாக இருந்தது. தவறி விழுந்தால் எலும்புகூடத் தேறாது என்று தோன்றியது.

வீரா-சூரா

பாட்டியின் இறுதிச் சடங்குகள் முடிந்து, குளித்துக்கொண்டிருந்தபோது ஒரு சிட்டுக் குருவி பறந்து வந்தது. அதன் வாயில் ஒரு ஓலை! கீழே போட்டுவிட்டுப் போய் விட்டது. மாணிக்கம் எடுத்துப் பார்த்தான்.

'அவசரம், உடனே கிளம்பி எல்லை மண்டபத்துக்கு வா - சூரபத்ரன்' என்று குறிப்பிட்டிருந்தது. வேகமாகக் குளித்து முடித்தான். தந்தை விமலன் எதிரே சென்று நின்றான். -

''அப்பா! நான் உடனே குருகுலத்துக்குப் போக வேண்டும்'' என்றான்.

''அப்படி என்னடா அவசரம்?''

''முக்கியமான விஷயம். சீக்கிரம் திரும்பிவிடுகிறேன்.''

''என்னமோ உன் நடவடிக்கையே சரியில்லை'' என்று அலுத்துக்கொண்டார் விமலன்.

மாணிக்கம் பதில் ஏதும் சொல்லாமல் கிளம்பினான். எல்லை மண்டபத்துக்குள் நுழைந்தான்.

''வா, மாணிக்கம்'' என்றபடி ஒரு தூணுக்குள்ளிருந்து வெளிப்பட்டான் சூரபத்ரன்.

''எதற்காக உடனே வரச் சொன்னீர்கள்?'' என்று கேட்டான்.

''நாம் ஒரு முக்கியமான இடத்துக்குப் போகப் போகிறோம். என் கையைப் பிடித்துக்கொள்'' என்றான் சூரபத்ரன்.

மாணிக்கம், சூரபத்திரனின் கையைப் பிடித்தான். அடுத்த நொடி காலடியில் பூகம்பம் போல் 'கிடுகிடு' நடுக்கம். தரை பிளந்தது. இருவரையும் உள்வாங்கியது. அந்த அதிர்ச்சியில் மாணிக்கம் தலை சுற்றி

மயக்கமானான். கண் விழித்துப் பார்த்தால் இங்கே இருக்கிறான். இங்கே அரசரைப் பார்த்ததும் அதிர்ச்சியாகி விட்டது.

'அரசர் எப்படி இங்கே வந்தார்? சூரபத்ரனின் நோக்கம் என்ன?' என்ற கேள்விகள் எழுந்தன.

மாணிக்கம், விதூஷகன் விமலனின் மகன் என்பதால், மற்ற சிறுவர்கள் அவனை 'கோமாளி' என்று கிண்டலுடன் அழைப்பார்கள். அதனால் மனத்தில் வெறுப்பு. யாரைப் பார்த்தாலும் காரணமே இல்லாமல் வெறுப்பும் கோபமும் வரும். எல்லோரிடமும் முரட்டுத்தனமாக நடந்து கொள்வான்.

சூரபத்ரனின் நட்பை ஏற்றதும் இந்த வெறுப்பினால்தான். ஆனால், இப்போது அரசரை இப்படிப் பார்த்ததும் பயம் வந்துவிட்டது. 'சூரபத்ரன் மிக ஆபத்தானவன்' என நினைத்தான்.

''என்ன மாணிக்கம், மயக்கம் தெளிந்ததா?''

திடீரென்று குரல் வரவே தலையை உயர்த்தினான். எதிரே இருந்த இன்னொரு காலியான ஊஞ்சலில் இப்போது சூரபத்ரன் இருந்தான். முகத்தில் குரூரச் சிரிப்பு!

''இது என்ன இடம்? அரசர் இங்கே எப்படி வந்தார்?''

''நான்தான் தூக்கி வந்தேன். உன் மூலமாக அந்த மந்திரவாளை எடுக்க முயன்றேன்; நடக்கவில்லை. அதனால் அரசரைக் கடத்திவிட்டேன். இவரைக் காப்பாற்ற உன் குருநாதர் வீரபத்ரன் மந்திரவாளுடன் வந்துகொண்டிருக்கிறான். அது என் கைக்கு வரும்வரை நீங்கள் இப்படித்தான் அந்தரத்தில் இருக்க வேண்டும்'' என்றான்.

''உன் திட்டம் என்ன?'' என்று கோபத்துடன் கேட்டான் மாணிக்கம்.

''அதை உன்னிடம் சொல்ல வேண்டிய அவசியமில்லை. இருந்தாலும் கொஞ்ச நாள் பழகியதற்காகச் சொல்கிறேன். அந்த மந்திரவாள் கையில் இருந்தால் உலகத்துக்கே சக்ரவர்த்தி ஆகலாம். மடையன் வீரபத்ரன், அதை வீணாக பெட்டிக்குள் வைத்திருக்கிறான். அதைக் கைப்பற்றி நான் உலக சக்ரவர்த்தியாகப் போகிறேன்'' என்றான் சூரபத்ரன்.

அப்போது பொன்முகிலன் மயக்கம் தெளிந்து நிமிர்ந்தார். அவரைப் பார்த்துச் சிரித்த சூரபத்ரன், ''அரசருக்கு வந்தனம். உங்கள் அரண்மனைக்கு விசித்திர உருவமாக வந்து உங்களைத் தூக்கி வந்தது நான்தான். உங்கள் உடம்பில் கொப்புளங்களை உண்டாக்கியதும் அடியேன்தான். பயப்படாதீர்கள்! மந்திரவாள் கைக்கு வந்ததும் விட்டு விடுகிறேன். அதற்குள் வீரத்தை காட்ட நினைத்தால் என்ன ஆகும் தெரியுமா?'' என்ற சூரபத்ரன் சூழ்ச்சியாய்ச் சிரித்தான்.

அடுத்த நொடி அரசர் இருந்த ஊஞ்சலின் இரும்புச் சங்கிலிகள் பாம்புகளாக மாறின. அவை மெல்ல மேல்நோக்கிச் செல்ல, பலகை விடுபட்டு 'விர்'ரென கீழ் நோக்கிச் செல்ல,

ஒரு சிவப்பு நிற சிலந்தி வலையைப் பின்னியவாறு மாணிக்கம் இருந்த ஊஞ்சலை நோக்கி வந்தது.

மாணிக்கம் திடுக்கிட்டான்.

ஆனால், சட்டென இரும்புச் சங்கிலி தோன்றி முன்போல் ஆனது. மாணிக்கம்தான் பயந்தானே தவிர, அரசர் அசரவில்லை. சூரபத்ரனைச் சுட்டு விடுவதைப்போல் பார்த்தார்.

''சூரபத்ரா! உன்னைப் பற்றி நான் கேள்விப்பட்டிருக்கிறேன். உன் எண்ணம் ஈடேறாது. குருநாதர் வருவார். உனக்கொரு முடிவு கட்டுவார்'' என்றார்.

''ஹா... ஹா... ஹா...'' என அட்டகாசமாகச் சிரித்த சூரபத்ரன், ''இன்னும் சற்று நேரத்தில் நீயே பார்க்கத்தானே போகிறாய்'' என்று கூறிவிட்டு, அந்தரத்தில் மிதந்தவாறு சுவரை நெருங்கி அதற்குள் மறைந்தான்.

அரசர் மாணிக்கத்தைப் பார்த்தார். ''தம்பி நீ யார்?''

''நான் விதூஷகர் விமலனின் மகன் மாணிக்கம். இவனோடு தகாத நட்பு வைத்துக் கொண்டிருந்தேன். இப்போது தான் அவனது உண்மை சொரூபம் தெரிகிறது. என்னை மன்னியுங்கள்'' என்றான்.

''கவலைப்படாதே! குருநாதர் கண்டிப்பாக வருவார். இவன் அழியப் போவது நிச்சயம்'' என்றார் அரசர்.

அப்போது -

ஒரு சிவப்பு நிற சிலந்தி வலையைப் பின்னியவாறு மாணிக்கம் இருந்த ஊஞ்சலை நோக்கி வந்தது. மாணிக்கம் அதிர்ந்தான். சங்கிலியைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு கால்களை உயர்த்தி, சிலந்தியை நோக்கி உதைத்தான். அது விலகி மீண்டும் மீண்டும் சுவரிலிருந்து ஊஞ்சலை நோக்கி வலையைப் பின்னியது. சில நிமிடங்களில் சுவருக்கும்



ஊஞ்சலுக்கும் நடுவே கயிற்றுப் பாலம் போல சிலந்தி வலை உருவாகிவிட்டது.

இப்போது முதலை அளவில் இருந்த பல்லிகளில் ஒன்று, அந்த வலையில் கால்களை வைத்து மாணிக்கத்தை நோக்கி வந்தது. அவன் பயத்தில் வீறிட்டான்.

''மாணிக்கம், பயப்படாதே! தைரியமாக இரு'' என்ற அரசர் தனது இடுப்பருகே இருந்து குத்துவாளை எடுத்து, பல்லியைக் குறி பார்த்து வீசினார்.

கத்தி, சரியாக பல்லியின் கழுத்தில் பாய்ந்தது. அது துள்ளியபடி வலையிலிருந்து விடுபட்டு கீழே விழுந்துவிட்டது. ஆனால், அது துள்ளிய துள்ளலில் ஊஞ்சல் ஆடி, கவிழ்ந்தது.

மாணிக்கம் அலறலுடன் கீழ் நோக்கி விழ ஆரம்பித்தான்.

(தொடரும்)



இது வெற்றிப் படை!

ஈரான் என்று சொன்னதும் எண்ணெய்க் கிணறு, அமெரிக்கா போர்... இப்படி வரிசையாக உங்கள் நினைவுக்கு வருகிறதல்லவா? இனி இன்னொரு விஷயமும் நினைவுக்கு வரும். சமீபத்தில் அங்கே சென்ற ஒரு படை, பல சாதனைகளைப் படைத்து வெற்றியுடன் திரும்பியுள்ளது. அந்தப் படை சென்றது போர் புரிவதற்கல்ல... விளையாடுவதற்கு.

ஆசியாவின் முன்னணி செஸ் வீரர்கள் பங்கேற்ற 'ஆசிய இளைஞர் செஸ் போட்டி' ஈரானில் கடந்த ஜூலை மாதம் நடந்தது. பல்வேறு வயது பிரிவில் நடைபெற்ற இப்போட்டிகளில் இந்தியாவின் சார்பில் நாற்பத்தாறு பேர் பங்கேற்றனர். அவர்களில் இருபத்தாறு பேர் பல்வேறு பதக்கங்களுடன் நாடு திரும்பியுள்ளார்கள். இதில் இன்னொரு சாதனை, ஒரே பள்ளியைச் சேர்ந்த ஏழு பேர் பதக்கங்களை வென்றதுதான்! அந்த வெற்றிப் படையைச் சந்திப்போமா?

சென்னை முகப்பேரில் உள்ளது வேலம்மாள் மேல்நிலைப் பள்ளி. அங்கேதான் இருக்கிறது அந்தப் படை. ஐந்தாம் வகுப்பு படிக்கிறார் மகாலட்சுமி. அப்பா முகுந்த்குமார், அம்மா கீதா. ஐந்தாவது வயதிலேயே சதுரங்க



✱ உத்ரா



✱ மகாலட்சுமி



✱ பிரதீப்குமார்



✱ மோகனப்ரியா

காய்கள் இவரது விரல்களுடன் விளையாட ஆரம்பித்துவிட்டன. அப்போது தொடங்கி, மாவட்ட, மாநில, தேசிய அளவிலான பல்வேறு செஸ் போட்டிகளில் பங்கேற்று பரிசுகளை அள்ளியுள்ளார். ஈரானில் நடந்த ஆசிய போட்டியில் இவர் வென்றது தங்கப் பதக்கத்தை.

மகாலட்சுமிக்கு செஸ் தவிர வீடியோ கேம் விளையாட பிடிக்குமாம். தோழிகளிடம் பேசும்போது நிறைய கடி ஜோக்குகளைச் சொல்வாராம். இவருக்கு மிகவும் பிடித்த நடிகர் விவேக். விளையாட்டு வீரர்களில் பிடித்தவர்கள்...?

''செஸ்ஸில் விஸ்வநாதன் ஆனந்த், டென்னிஸில் சானியா மிர்சா, கிரிக்கெட்டில் கங்குலி'' என்கிறார். கிராண்ட் மாஸ்டர் பட்டம் வெல்வதுதான் இவரது லட்சியமாம்.

பன்னிரண்டாம் வகுப்பு படிக்கும் உத்ராவும் இந்தப் போட்டியின் வேறு பிரிவில் தங்கம் வென்றுள்ளார். இவரது தந்தை பக்கிரிசாமி, தாய் ரேவதி. இவரது இந்த வெற்றிக்கு முதல் காரணம் பெற்றோர்தானாம். அவர்கள்தான் உற்சாகமூட்டி போட்டிகளில் பங்கேற்க வைத்தார்களாம். அடுத்து இவர் நன்றி கூறுவது இவரது கோச் சையத் அன்வர் அவர்களுக்கு.

''பள்ளி நிர்வாகமும் பல வகையில் எனக்கு உதவி செய்தது. அதெல்லாம் தான் எனது இந்த உயர்வுக்கு காரணம்''என்கிறார் உத்ரா.

இதே பள்ளியில் படிக்கும் அதிபன் இப்போட்டியில் வெள்ளி பதக்கம் வென்றுள்ளார். மோகனப்ரியாவும்,



* ராஜூ மோகன்

ஷியாம் சுந்தரும் நான்காவது இடத்தைப் பிடித்துள்ளனர். சேதுராமனும் பிரதீப்குமாரும் ஆறாவது இடத்தைப் பிடித்துள்ளனர்.

''எங்கள் பள்ளியில் படிக்கும் மாணவர்களுக்கு படிப்பு மட்டும் சொல்லித் தருவதில்லை. விளையாட்டு உட்பட அவர்களிடமுள்ள பல்வேறு திறமைகளை ஊக்கப்படுத்தி வெளியே கொண்டு வருகிறோம். செஸ்ஸில் மட்டும் கிட்டதட்ட நாற்பது மாணவர்கள் இந்தப் பள்ளி மூலம் பல்வேறு போட்டிகளில் பங்கேற்று வருகிறார்கள். இவர்களுக்கு பள்ளி நிர்வாகம் பலவகையில் உதவி செய்கிறது'' என்கிறார் ராஜூமோகன். இவர் மகாலட்சுமிக்கு கோச்சாக உள்ளார்.

மகாலட்சுமி உட்பட ஏழு பேரும் ஈரான் சென்று வருவதற்கான பயணச் செலவை பள்ளியே ஏற்றுக்கொண்டதாம். அதுமட்டுமா? பதக்கங்களுடன் திரும்பிய இந்த வெற்றிப் படைக்கு பிரமாதமாக வரவேற்பு விழாவும் நடத்தியது. அவர்களை 'சாரட்' வண்டியில் பள்ளிக்கு அழைத்து வந்து, தலா ஐம்பதாயிரம் ரூபாய் பரிசும் வழங்கியுள்ளது.

இது ஆரம்பம்தான். இன்னும் பல சாதனைகளைப் புரிந்து உலகம் வியக்க வெற்றி மகுடத்தை இவர்கள் சூடப் போவது உறுதி. அதற்கான அறிகுறி இப்போதே தெரிகிறது!

சந்திப்பு : **யுவா**

அட்டையில் : **மோகனப்ரியா, மகாலட்சுமி, உத்ரா, பிரதீப்குமார்**

படங்கள் : **ஸ்ரீஹரி**

ஒரு நிமிடம்...
கோகுலம் சிறுவர் சங்கம் பட்டியல் தொடர்ச்சி அடுத்த இதழில் இடம் பெறும்...





பெயர் : ....

முகவரி : ....

....

....

....


ஒரு வருட சந்தா ரூ. 96/-. இதை டிமாண்ட் டிராஃப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். உள்ளூர் காசோலைகள் மட்டுமே ஏற்கப்படும்.

அனுப்ப வேண்டிய முகவரி :

சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்), கல்கி பில்டிங்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 032

வைரக் கடுக்கன்

கதை: வா.இரஞ்சித்குமார் படம்:ராம்கி




வயிறார சாப்பிட்டபின் -
என்ன வேலைன்னு சொல்லுங்க செய்யறேன். நான் இங்கேயே இருந்துடறேன்.
அப்படின்னா சில நிபந்தனைகள். நான் சொல்ற...
...எல்லா வேலைகளையும் செய்யணும். கூலியா தினமும் ஒரு இலை சாப்பாடுதான் போடுவேன். நானா உன்னை வேலையை விட்டு அனுப்பமாட்டேன். அப்படிச் சொல்லும் சூழ்நிலை வந்தா...
... என்னோட ஒரு பக்க வைரக் கடுக்கனைத் தரேன். நீயா போறதுன்னா உன்னோட ஒரு காதை வெட்டித் தந்துடணும்.
முனுசாமி சம்மதித்தான்.
நாட்கள் செல்லச் செல்ல சுப்பன் தரும் வேலைகளும் அதிகமானது.
கடவுளே! இப்படி ஒரு கொடியவனிடம் மாட்டிக்கொண்டோமே... எப்படித் தப்பிப்பது?


அதேசமயம் முனுசாமியின் வீட்டில் -
கந்தா, ஏதோ கோபத்தில் உன் அண்ணனை விரட்டிவிட்டேன். அவனைத் தேடி அழைத்துவா!
சரிப்பா! இப்பவே போறேன்.
கந்தசாமி எங்கெங்கோ விசாரித்து இறுதியில் சுப்பன் வீட்டுக்கு வந்தான்.
அண்ணா! அப்பா உன்னை அழைத்து வரச் சொன்னார். உடனே புறப்படு!
முடியாது கந்தா...
முனுசாமி நடந்ததைச் சொன்னான்.
கவலைப்படாதே! இந்தப் பிரச்னையை நான் பார்த்துக் கொள்கிறேன்.
எப்படி கந்தா?
சுப்பன் வந்ததும் -
ஐயா, என் அண்ணனை அனுப்பிவிடுங்கள். அவனுக்கு பதில் நான் உங்கள் நிபந்தனைகளை ஏற்று வேலையைத் தொடர்கிறேன்.


அவனைவிட இவன் பலசாலியாக இருக்கிறான். அதிகம் வேலை வாங்கலாம்.
சரி! சரி! அப்படியே செய்.
மறுநாள் கந்தசாமி -
ஐயா, துணிகளைத் துவைச்சுட்டேன். ஆனா, வேகமா அடிச்சு கசக்கினதுல கிழிஞ்சு போச்சு.
மதியம் -
என்னடா, சமையலறையில் ஒரே சத்தம்?
பாத்திரம் தவறி விழுந்து உடைஞ்சு போச்சுங்க.
இரண்டே நாட்களில்...
எப்பா! நீ வேலை செய்தது போதும். இந்தா வைரக் கடுக்கன். இடத்தைக் காலி பண்ணு!
ஐயா, உங்க வைரம் எனக்கு வேண்டாம். இனிமே லாவது இப்படி நடந்து கொள்ளாதீர்கள்!

விடையைச் சொல்; பரிசை வெல் - 15

1. அக்பரின் அவைப் பாடகர் பெயர் ....

2. எயின்தோவென் பிறந்த ஊர் ....

3. இந்திய சங்கத்தைத் தோற்றுவித்தவர் ....

4. ஜாக்கிசான் தொடரை உருவாக்கியவர் ....

5. அம்முவின் தோழி பெயர் ....

என் பெயர் : ....

வகுப்பு, பள்ளி : ....

: ....

வீட்டு முகவரி : ....

....

பின்கோடு ....

போட்டி

இங்கே ஐந்து கேள்விகள் கேட்கப் பட்டுள்ளன. விடைகளை நீங்கள் எங்கும் தேடிச் செல்ல வேண்டாம். இதே இதழில்தான் உள்ளன.



அவற்றைக் கண்டுபிடித்து எழுதுங்கள். கூப்பனையும் பூர்த்திசெய்து இந்தப் பக்கத்தைக் கத்தரித்து அனுப்புங்கள். ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

முடிவு தேதி : 15.9.2008

அனுப்ப வேண்டிய முகவரி:

ஆசிரியர், கோகுலம், (பரிசுப் போட்டி)

47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 32

பரிசு ரூபாய் 1000/-


பா. கஜேந்திரகுமார்,
எட்டாம் வகுப்பு,
க.வி. உயர்நிலைப் பள்ளி,
சிறுக்குவார்பட்டி.
ஸ்பெஷல்
உங்கள் கைவண்ணம்!

Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN/CC(S)DN/109/06-08 • Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN/CC(S)DN/47/06-08 • Registered as a Newspaper in Srilanka

